for Young

friends of fmpb

Vol 24-Issue 9 - Dec - 2024

FRIENDS MISSIONARY PRAYER BAND

A monthly Prayer Bulletin for **Youth & Teens**

# பூரண ஆசீர்வாதத்திற்காக சிலுவையைப் பார்



Private circulation only

# தீர்க்கதரிசன புத்தகங்களின்
# கிறிஸ்து



Mrs. Kiruba Isaac

கடந்த மாதங்களில் எல்லாம் கிறிஸ்துவின் சாயலை ஒவ்வொரு வேதாகம புருஷர்களோடு ஒப்பிட்டு படித்தோம். இந்த கடைசி மாதத்தில் தீர்க்கதரிசன புத்தகங்களின் அர்த்தத்தை அறிந்து அதில் கிறிஸ்துவின் சுவிசேஷம் எப்படி உள்ளடங்கியிருக்கிறது என்பதைக் கற்று தேவனைத் துதிக்கப்போகிறோம்.

பெரிய தீர்க்கத்தரிசன புத்தகங்கள் ஐந்தையும் எழுதின நான்கு தீர்க்கதரிசிகளின் பெயர்களை முதலில் பார்ப்போம். ஏசாயா என்பதற்கு **'கர்த்தருடைய மீட்பு'** என்றும், எரேமியா என்பதற்கு **'கர்த்தர் உயர்ந்தவர்'** என்றும், எசேக்கியேல் என்பதற்கு **'தேவனுடைய வல்லமை'** என்றும், தானியேல் என்பதற்கு **'தேவன் நீதியுள்ளவர்'** என்றும் அர்த்தம். இந்த நான்கு பெயர்களின் அர்த்தத்தையும் ஒரே வாக்கியத்தில் எழுதினால் **"நமது இரட்சகராகிய இயேசுவானவர் அதி உன்னதமான கர்த்தரும், சர்வ வல்லமையுள்ள தேவனுமாவார்"**. இது கிறிஸ்துவைக் குறித்ததான சுவிசேஷத்தை நமக்கு விளக்குகிறது. வேதாகமத்திலுள்ள பெயர்கள் (யா)வில் முடிந்தால் (ஒபதியா, சகரியா). I ah இதில் I என்பது என்னுடைய என்று பொருட்படும். அதேபோல் ah என்பது yah, எபிரெயத்தில் கடவுளைக் குறிக்கும். அதேபோல் (யேல்) என்று முடிந்தால் (யோவேல், தானியேல், சாமுவேல்) "EL" என்பதின் அர்த்தம் வல்லமையுள்ள தேவன் என்பதே.

இப்பொழுது பழைய ஏற்பாட்டின் கடைசி 12 சிறிய தீர்க்கதரிசன புத்தகங்களின் அர்த்தத்தை அறிந்து அதிலிருந்து கிடைக்கும் நற்செய்தியைப் பார்ப்போம். ஓசியா என்பது **'இரட்சகராகிய தேவன்'** என்றும், யோவேல் என்பது **"கர்த்தரே தேவன்"** என்றும், ஆமோஸ் என்பது **'சுமை சுமப்பவர்'** என்றும், ஒபதியா என்பது **'கர்த்தருடைய ஊழியக்காரர்'** என்றும், யோனா என்பது **'புறா'** என்றும், மீகா என்பது **'கர்த்தருக்கு ஒப்பானவர் யார்'** என்றும், நாகூம் என்பது **'தேற்றரவாளன்'** என்றும் ஆபகூக் என்பது **'அரவணைத்தல்'** என்றும், செப்பனியா என்பது **'கர்த்தர் மறைந்திருக்கிறார்'** என்றும், ஆகாய் என்பது **'பண்டிகையின் சந்தோஷம்'** என்றும், சகரியா என்பது **'தேவன் நினைவுக்கூறுகிறார்'** என்றும், மல்கியா என்பது 'என்னுடைய தூதன்" என்றும் பொருள்படும். மேலே சொல்லப்பட்ட 12 அர்த்தங்களையும் ஒன்று சேர வாசிக்கும் பொழுது கிறிஸ்துவைப் பற்றின சுவிசேஷம் கிடைக்கும். அதாவது "இரட்சகராகிய கர்த்தர், அவர் இயேசு, தேவனும் அவரே, நம்முடைய சுமையை ஏற்று நம்மத்தியில் ஊழியக்காரனைப் போல் இருந்தார். பரமேறினப் பின்பு பரிசுத்த ஆவியை நமக்கு பொழிந்தருளின இவருக்கு ஒப்பானவர் யார்? இவர் தேற்றரவாளன், நம்மை அரவணைக்கிறவர், இவர் நம் கண்களுக்கு மறைந்திருக்கிறார். நமக்கு பண்டிகையின் சந்தோஷத்தைக் கொடுத்து நம்மை நினைவு கூறும் தேவன். அவருடைய பிள்ளைகளாக (தூதன்) நம்மை மாற்றியிருக்கிறார்".

## துதிக்குறிப்புகள்

- இரட்சகராகிய கிறிஸ்து இயேசுவே உம்மைத் துதிக்கிறோம்!
- பரிசுத்த ஆவியை பொழிந்தருளினவரே உம்மைப் போற்றுகிறோம்!
- ஊழியக்காரனைப் போல் இருந்தவரே உம்மைத் துதிக்கிறோம்!
- பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே உம்மைத் தொழுகிறோம்!
- எங்களை நினைவு கூறுகிறவரே உம்மை வாழ்த்துகிறோம்!
- எங்களுடைய பாவங்களை மன்னித்து, எங்களை அரவணைத்து ஏற்றுக் கொள்கிறவரே உம்மை வணங்குகிறோம்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266



**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**


ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| பாடுகளின் மத்தியில் பரமனின் பணி | - 6, 7 |
| இளம் வாலிபர்கள் / இளைஞர்களின் அடிமைத்தனங்கள் | - 12 |
| IJM INDIA | - 15 |
| ஜான் பால்மர் | - 18 |
| அடிமைத்தனங்கள் | - 19 |
| கிறிஸ்துமஸ் பயணம் | - 22 |
| ஜொலிக்கத் தவறிய நட்சத்திரங்கள் | - 23 |




# உண்மையுள்ள மனிதன் பூரண ஆசீர்வாதங்களினால் நிறைந்திருப்பான்

உண்மையுள்ளவர்களாக இருப்பதில் பல நன்மைகள் உள்ளன. Emunah என்ற Hebrew வார்த்தைக்கு நிலையான, விசுவாசமான, நம்பகமான மற்றும் பாதுகாப்பான ஒருவரைப் பற்றிச் சொல்கிறது. ஆண்டவருடைய வார்த்தையையும், அவருடைய சித்தத்தையும் விடாமல் முயற்சி செய்பவரே பூரண ஆசீர்வாதங்களைப் பெறுவர்.

சிமிர்னா சபைக்கு ஆண்டவர் சொல்லும்பொழுது, நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்கு தருவேன். பிரியமான தம்பி தங்கையே, ஆண்டவர் உன்னிடத்தில் எதிர்பார்க்கிற ஒன்று உண்மை. ஒருவேளை எனக்கு பாடுகிற Talent இல்லையே! மற்றவர்களைப் போல எனக்கு Stage-யில் Message கொடுக்க முடியவில்லையே! இப்படி மற்றவர்களுடன் Compare பண்ணிக் கொண்டிருக்கிறாயோ! ஆனால் ஆண்டவர் உன்னிடத்தில் எதிர்பார்க்கின்ற ஒன்று உண்மை. எனவேதான் சாலொமோன் சொல்கிறார், **"உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்".**

**2024-ம் ஆண்டின் கடைசி மாதத்தில் வந்திருக்கின்ற நாம், ஆண்டவருடைய பாதத்தில் நம்மை சற்று சோதித்துப் பார்ப்போம். இன்னும் நாம் ஒருவேளை உண்மையாயிருக்க முடியாமல் போனவற்றை நினைவு கூர்ந்து நம்மை அர்ப்பணிப்போம்.**

**2024-ம் ஆண்டு முழுவதும் நமது முன்னேற்றப்பணி மாவட்டங்களில் வாலிபர் கூடுகைகள் நடத்துவதற்கு ஆலயத்தைத் திறந்துக் கொடுத்த திருச்சபைப் போதகர்களுக்கும், முன்னேற்றப்பணி, பிராந்தியம் மற்றும் மண்டல செயலர்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். நமது முதல் பணித்தளமாகிய பெரியமலையில் அக்டோபர் 31 மற்றும் நவம்பர் 1, 2 தேதிகளில் நடைபெற்ற வாலிபர் முகாமை கர்த்தர் மகிமையாய் ஆசீர்வதித்துத் தந்தார். இந்த வாலிபர் முகாமிற்காக ஜெபித்து, உழைத்த தென் மண்டல வாலிபர்களுக்கு இயக்கமாய் நன்றி சொல்கிறோம்.**

**2025-ம் ஆண்டு பொங்கல் விடுமுறை நாட்களில் "இறைவனின் தோட்டம்" (பூண்டி) என்ற இடத்தில் நடைபெற இருக்கின்ற வாலிபர் முகாமிற்காக தொடர்ந்து ஜெபியுங்கள். மேலும் 2025-ம் ஆண்டின் கேரீத் பத்திரிக்கைத் தடையில்லாமல் தொடர்ந்து வெளிவர ஜெபியுங்கள்.**

**கேரீத் நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

தேவன் உங்களோடிருந்து உங்களை வழி நடத்துவாராக. ஆமென்!

கிறிஸ்துவின் பணியில்,
*ஜெ. டேனியல் அருள்மணி*



# பரிபூரண ஆசீர்வாதம்

இந்த ஆண்டு முழுவதும் பரிபூரணத்தை கற்றுக்கொண்டு கிறிஸ்துவுக்குள் நாம் வளர்ந்திருக்கிறோம் என்பதை மறுக்க இயலாது. இந்த 12ம் மாதத்திலும் பரிபூரண ஆசீர்வாதம் என்ற தலைப்பின் கீழ் தியானித்து அந்த ஆசீர்வாதத்தை உண்மையாகவே அனுபவிக்கப் போகிறோம் என்பதில் எவ்வளவுவேனும் சந்தேகமில்லை. கொலோசெயர் 2:10 யின் படி **“சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரண முள்ளவர்களாயிருக்கிறீர்கள்”** என்று வேதம் நமக்கு அதிக உறுதியாக கோடிட்டு காட்டுகிறது. ஆனால் அந்த பரிபூரண ஆசீர்வாதத்தை நாம் அனுபவிக்கிறோமா என்ற கேள்வியோடு ஒரு வசனத்தின் அடிப்படையில் நாம் கற்றுக் கொள்ளப்போகிறோம்.

ஞானியாகிய சாலொமோன் தனது நீதிமொழிகளில் சொல்லும் பொழுது உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்று எழுதியிருக்கிறார். (28:20) இப்பொழுது இந்த வசனத்தை மீண்டும் வாசிக்கும் பொழுது எந்த மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்று கேள்வி கேட்க வேண்டும். அப்படி கேள்வி கேட்கும்பொழுது உங்களுக்கு கிடைக்கும் பதில் என்ன? **“உண்மையுள்ளவன்”** யாரிடம் உண்மையாக இருக்க வேண்டும் என்று கேட்டால், முதலாவது கடவுளிடம் உண்மையாக இருக்க வேண்டும் என்றும் இரண்டாவது சக மனிதரிடம் உண்மையாக இருக்க வேண்டும் என்றும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இப்படி இருக்கும் பொழுது கடவுளும் நம்முடைய காரியங்களில் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது. இதுதான் உனக்கும், எனக்கும் பரிபூரண ஆசீர்வாதம். இதை மையமாகக் கொண்டு மூன்று வேதாகம புருஷர்களிடமிருந்து இந்த மாத செய்தியைப் பெற்றுக் கொள்கிறோம். அவர்கள் எசேக்கியா, தாவீது, ஆபிரகாம்.

## 1. அர்ப்பணத்தில் உண்மை - எசேக்கியா:

எசேக்கியா கர்த்தருடைய ஆலயத்தில் பண்டகசாலைகளை ஆயத்தப்படுத்தி, ஜனங்களை காணிக்கைகளையும், தசம பாகங்களையும், பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளையும் உண்மையாய் எடுத்து வைக்க உற்சாகப்படுத்தினான். இதை தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்மையும், செம்மையும், உண்மையுமானதைச் செய்தான். மேலும் தேவனுடைய ஆலயத்தின் வேலையிலும், தன் தேவனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திற்கும், கற்பனைக்கும் அடுத்த காரியத்தில் முழு இருதயத்தோடு செய்து ஆசீர்வாதம் பெற்றான் என்று **II நாளாகமம் 31ல்** வாசிக்கலாம். பின் நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்திற்கேதுவாய் இருந்த பொழுது தன் முகத்தை சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணும் பொழுது, கர்த்தருக்கு முன்பாக தனது உண்மையை நினைப்பூட்டி கதறிய பொழுது, தேவனும் அதை நினைவுக் கூர்ந்து அவனுடைய ஆயுசு நாட்களைக் கூட்டிக் கொடுப்பதை II இராஜாக்கள் 20ல் வாசிக்க முடிகிறது.

## 2. ஆராதனையில் உண்மை - தாவீது:

தாவீதை குறித்து நாம் அநேக காரியங்களை கற்றிருக்கக்கூடும். இப்பொழுது கடவுளுக்கு முன்பாக எப்படிப்பட்டவனாய் இருந்தான் என்பதை அவனுடைய மகனாகிய சாலொமோனின் வாய்மொழிகளிலிருந்து பார்ப்போம். என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும், நீதியும், மன நேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்கு பெரிய கிருபைச்செய்து, அந்த பெரிய கிருபையை அவருக்கு காத்து இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர் என்று சொல்லும் பொழுது (I இராஜாக்கள் 3) தாவீதின் உண்மையும் அதனால் தாவீதுடைய அரச பதவி அவருடைய குமாரனுக்கு வந்ததையும் அறிய முடிகிறது. இன்னும் சொல்லப்போனால் யூதாவை ஆண்ட அரசர்களைக் குறிப்பிடும் பொழுது தாவீதின் வம்சம் என்றே குறிப்பிடப்படுகிறது. தேவனும் அவனிடத்தில் உண்மையையுள்ளவராய் இருந்ததை, தாவீதுக்கு நான் பொய் சொல்லேன், என் உண்மையில் பிசகாமல் இருப்பேன் என்றும், என் உண்மையும், கிருபையும் அவனோடு இருக்கும் என்றும் சங்கீதம் 89ல் வாசிக்கிறோம். தாவீதின் வார்த்தையைப் பார்க்கும் பொழுது சங்கீதத்தில் உம்முடைய சமூகத்தில் பரிபூரண

ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு என்றார்.

### 3. அழைப்பில் உண்மை - ஆபிரகாம்:

இதில் ஆபிரகாம் தேவனுக்கு முன்பாக கடவுளின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து உண்மையாய் இருந்தது போல, கடவுளும் ஆபிரகாமுக்கு தேசங்களைக் கொடுத்து அவனை ஆசீர்வதித்தார் என்பதை நெகேமியாவின் கூற்று மூலம் அறிந்து கொள்ள முடியும். இப்போது அந்த வசனத்தை வாசிப்போம். நெகேமியா 9:7, 8-ல் **“ஆபிராமைத் தெரிந்துகொண்டு, அவனை ஊர் என்னும் கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி, அவனுக்கு ஆபிரகாம் என்னும் பேரிட்ட தேவனாகிய கர்த்தர் நீர். அவன் இருதயத்தை உமக்கு முன்பாக உண்மையுள்ளதாகக்கண்டு, கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், எபூசியர், கிர்காசியருடைய தேசத்தை அவன் சந்ததிக்குக் கொடுக்கும்படி, அவனோடு உடன்படிக்கைபண்ணி. உம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றினீர்; நீர் நீதியுள்ளவர்”**.

முடிவுரைக்கு செல்லும் முன்பதாக இந்த உண்மை சக மனிதர்களிடம் காணப்பட வேண்டும். அதாவது ஆபிரகாமின் ஊழியக்காரன் ஈசாக்குக்கு பெண்பார்க்கச் செல்லும் பொழுது பெத்துவேலிடம் சொன்ன வார்த்தை **“உண்மையாய் சொல்லுங்கள், இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லுங்கள்”** என்று சொல்லும் பொழுது, இந்த சமுதாயம் ஒரு மனிதரிடம் எவ்வளவு உண்மையை எதிர்பார்க்கிறது என்று புரிகிறதா? அதேப்போல் தகப்பனாகிய இஸ்ரவேல் தன் மகனாகிய யோசேப்பிடம் உண்மையை எதிர்பார்க்கிறார் (ஆதியாகமம் 47). மேலும் பொறுப்புள்ள பதவிகளுக்கு உண்மை அவசியம் என்பதை எத்திரோ யாத்திராகமம் 18ல் குறிப்பிடுகிறார். கடவுள் மோசேயைக் குறித்து சொல்லும் பொழுது என் வீட்டில் அவன் எங்கும் உண்மையுள்ளவன் என்கிறார்.

தம்பி, தங்காய் கடவுளுடைய காரியங்களிலும், சக மனிதரிடமும், பொறுப்பிலும், வீட்டிலும் உண்மையாயிருக்கும்பொழுது தேவனும் உன் காரியங்களில் உண்மையாயிருக்கிறார். இதன் விளைவு பரிபூரண ஆசீர்வாதம். இந்த பரிபூரண ஆசீர்வாதத்தில் உள்ளடங்கிய மூன்று முக்கிய கூறுகள்:

- பூரண ஆயுசு (யாத்திராகமம் 23:26)
- பூரண ஆகாரம் (சங்கீதம 78:25)
- பூரண ஆனந்தம் (சங்கீதம் 16:11)

இவை அனைத்தையும் தேவன் வருகிற புதிய ஆண்டில் அளவில்லாமல் உங்களுக்குத் தருவாராக. உங்களுக்கு என் அன்பின் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## Feedback of the Kolathur Mobilization Youth During their Karnataka Field Visit

1. In Kolar, I thought there will be more churches because it is Karnataka a well-developed state but it is surprising that there are only few churches and the distance between the churches is minimum 30 to 40 Km, this touched me and I realized that the Gospel need to be spread in our neighbouring state.
2. In Ananthapur there are lands but the owners are not willing to give for church and this made me realize, how they are neglecting Christianity and how much they hate Christianity and our prayers are needed for their deliverance.
3. There are many places in Kolar where there are many believers but are divided by the caste barrier and during worship they will not join in low caste people's houses and the believers asked us to pray to build a church so that they can worship together. This showed me the importance of building the churches in that region and I am motivated to pray for their salvation.
4. I was so blessed in this Kolar missionary trip, I have decided to be a part of FMPB activities, to support FMPB financially and physically, to be a part of building new church in the field we have visited.
5. This is my second field visit, and this time, I've committed to take a project and completing it within one year. I also pray daily for the health of our missionaries and their families.

- MR. WESLEY BASKER SOUNDARARAJ
HON. SECRETARY, KOLATHUR.







# பாடுகளின் மத்தியில் பரமனின் பணி

*அன்பார்ந்த கேரீத் நண்பர்களுக்கு,*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் ஈடுபாட்டிற்காகவும், கேரீத் பத்திரிக்கையை நீங்கள் தொடர்ந்து வாசித்துப் பயன்பெறுவதற்காகவும் ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன். “என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக (சங்கீதம் 34:3). இன்றைய நாட்களில் மீடியாவின் தாக்கத்தினால் அநேக வாலிபர்கள் தங்களைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் நம் வாழ்வில் அவருடைய நாமத்தை உயர்த்தும்படியாக நம்மை அழைக்கிறார்.

### உங்களைப் பற்றி சொல்லுங்கள் அண்ணன்:

எனது பெயர் சிபி செல்வின் சாம். எனது மனைவி கிரேஸ் சாம். எனக்கு 2 பிள்ளைகள் ஜானி சாம் (24), பென்னி சாம் (21). சிறுவயதில் கேரளாவிலுள்ள மூணார் பகுதியில் படித்து வந்தேன். அதன் பிறகு கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில் என்னுடைய உயர்கல்வியை முடித்ததோடு, பாலிடெக்னிக் முடிக்கவும் ஆண்டவர் கிருபைச் செய்தார். படிப்பு முடித்த பிறகு குடும்ப சூழ்நிலை காரணமாக மும்பை பட்டணத்திற்கு வந்து சில காலம் எனது சகோதரர்களோடு இணைந்து துணிக்கடையில் வேலை செய்து வந்தேன். 1991-ல் எனது படிப்பிற்கேற்ற பணியினை TATA கம்பெனியில் தொடர ஆண்டவர் உதவி செய்தார். அந்த நாட்களில் Muslim · Hindu Riots மும்பையில் மிகவும் தீவிரமாக இருந்தது.

### மிஷனெரி பணிக்கான அழைப்பை எப்படிப் பெற்றீர்கள்?

நான் எனது பணிக்காக கிளம்பும்போது ஒரு 16 வயது Muslim Girl கொல்லப்பட்டதை நேரில் பார்த்தேன். தேவன் என்னோடு யோவான் 3:16-ன் மூலமாக பேசினார். தேவ அன்பை எடுத்துச் சொல்ல உன்னை ஒப்புக்கொடு என்ற சத்தத்திற்கு கீழ்ப்படிந்தவனாக வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஊருக்கு வந்தேன். அப்பா அம்மாவின் கோபம் ஒரு புறம், தேவ அழைப்பு மறுபுறம். ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்தவனாக தேவ அழைப்புக்கு கீழ்படிந்து மிஷனெரியாக வந்தேன்.

### நீங்கள் எங்கெல்லாம் மிஷனெரி ஊழியத்தை செய்தீர்கள்?

நவநீதர் அண்ணனோடு இணைந்து Gospel Team-ல் பணிபுரிந்தேன். அப்பாவின் எதிர்ப்பையும் மீறி 1992-ல் பீகார் மாநிலம், மால்டோ இன மக்கள் மத்தியில் Volunteer ஆக சேர்ந்தேன். அன்றிலிருந்து எனது பயணம் மால்டோ இன மக்கள் மத்தியில் தொடர்ந்து வருகிறது. 1993-ல் பயிற்சிக்காக Bethel-ல் சேர்ந்தேன். 1995-ல் Musafarpur-ல் அடுத்த பயிற்சிக்காக சேர்ந்தேன். பயிற்சி முடித்து Jhansi, UP-க்கு அனுப்பப்பட்டேன். அங்கு Jeep team-ல் இணைந்து அநேக இடங்களில் பணிபுரிய தேவன் உதவி செய்தார். அங்கே கும்பமேளாவில் மக்களைச் சந்தித்து, Hindu குருக்களைச் சந்தித்து தெரிந்த, தெரியாத பாஷையில் சுவிசேஷம் அறிவித்தது மறக்க முடியாத அனுபவமாகும். Jeep-ல் இருக்கும்போது நடந்த மிகப்பெரிய ஆக்சிடென்ட்டில் இருந்து தேவன் என்னைப் பாதுகாத்தார். 1999-ல் திருமணம் முடிந்த பிறகு, மறுபடியும் மால்டோ இனமக்கள் மத்தியில் பணியினைத் தொடர்வதற்கு ஆண்டவர் கிருபைச் செய்தார். ஆரோனைப் போல அழைக்கப்பட்ட ஊழியம், கனமான ஊழியம் (எபிரெயர் 5:4), கிறிஸ்துவின் பாடுகளோடு ஐக்கியமாவதற்கு தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியம் (பிலிப்பியர் 3:10), பிதாவானவர் கனம் பண்ணும் ஊழியம் (யோவான் 12:26), அநேக இரத்த சாட்சிகளை நமது திருச்சபைக்கு எழுப்பித் தந்த ஊழியம். இந்த மேன்மையான ஊழியத்தை மிஷனெரிகளின் கல்லறைத் தோட்டம் என்று அழைக்கப்பட்ட பீஹாரிலே, இன்றைய ஜார்க்கண்டிலே தொடர ஆண்டவர் உதவி செய்தார்.

### உங்களுடைய ஊழியப் பாதை எப்படியிருந்தது?

1992 முதல் மால்டோ மக்கள் மொழியினைக் கற்றுக்கொண்டு முன்னோடி ஊழியராக போரியோ, சிங்கார்ஸி பகுதிகளில் தொடர தேவன் பெலன் தந்தார். மாதத்திற்கு ஒரு முறை மலேரியா வந்து சரீரத்தில் பலவீனம் தாக்கியது. ஆனாலும் மக்கள் கூட்டம் கூட்டமாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டனர். சிங்கார்ஸி பணித்தளத்தில் ஜார் பஹாட் கிராமத்தில் ஊழியம் செய்துவிட்டு திரும்பி வரும்போது நரபலி கொடுக்கும் சாமியாரிடம் மாட்டிக் கொண்டேன். 28 முறை பலி கொடுத்துவிட்டேன், 29ஆவது நபர் என்று கூறி எனது கை, கால்களைக் கட்டி படுக்க வைத்து விட்டான். ஆண்டவர் உன்னையும் நேசிக்கிறார் என்று சொல் என்ற சத்தம் கேட்கவே, அதை அவனிடம் சொல்ல, என்ன ஒரு அற்புதம் பலியிட கொண்டு சென்றவன், ஆண்டவனின் அன்பைப் பற்றி தெரிந்துக் கொண்டு 15 கிராமங்களை ஆண்டவருக்காக கொண்டு வந்தான்.

குறைந்தது 65 முறை மலேரியா தாக்கத்தின் காரணமாக சரீரத்தில் diabetes வியாதியும், 1999ல் தொற்றிக் கொண்டது. சரீரத்தின் போராட்டம், ஊழியத்தின் நாட்டம், தொடர்கிறது ஓட்டம். 2004ல் பகாயா சிறுவர் விடுதியில் ஒரு சிறுமி இறந்து போனதால் அந்த கிராம மக்கள் என்மீது கோபம் கொண்டு மூன்று நாட்கள் அடைத்து வைத்தனர். சிறுமியை உயிரோடு கொண்டு வா என்று கூச்சலிட்டனர். மருத்துவ வசதி, வாகன

வசதி, சாலை வசதி இல்லாத சூழ்நிலை தேவன் சகாயராயிருந்து அந்த சூழ்நிலையைக் கடந்து போக கிருபைச் செய்தார்.

2007-ல் பெல்பதாரி சிறுவர்கள் விடுதியில் முதல்முறையாக 10th Exam-யை ஐந்து மாணவர்கள் எழுதியிருந்தனர். அதில் தாவீது என்ற மாணவன் Kala-azar வியாதி காரணமாக ரிசல்ட் வருவதற்கு முன்பே மரித்து விட்டான். இதனால் கோபமடைந்த மக்கள் என்னைத் தலைகீழாக மரத்தில் கட்டி வைத்து அடித்தனர். ஒரு சபை மூப்பர் மிகுந்த அழுகையோடு ஓடி வந்து என்னைப் பாதுகாத்தார். இவன் இங்கு இனி வரமாட்டான் என்று எதிர்பார்த்த மக்கள் மத்தியில் மறுபடியும் தொடர்ந்து பணி செய்ததால் மக்களிடையே பெரிய மாற்றம்.

## உங்கள் சொந்த ஊருக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பம் எப்போதாவது ஏற்பட்டதா?

இல்லை, எனது பெரிய மகன் TB வந்து கஷ்டப்பட்டபோது இந்த ஊழியத்தை தொடர முடியாதோ என்ற தயக்கம் ஏற்பட்டது. அதையும் மேற்கொள்ள தேவன் கிருபை செய்தார். எனது சிறிய மகன் Delivery-க்கு முன்பு Falciparum malaria வந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் தாயை மாத்திரம் காப்பாற்றி விடலாம் என்று மருத்துவர்கள் ஆலோசனை சொன்னபோது தேவன் அருகில் வந்து பயப்படாதே என்று சொல்லி தாயையும், சேயையும் பத்திரமாக மீட்டுத் தந்தார். அநேகரின் ஜெபம் எங்களைத் தாங்கியது. கிறிஸ்துவின் பணியில் அநேக சிறுவர், சிறுமிகளை, கிராம மக்களை ஆண்டவரண்டைக்கு வழிநடத்த தேவன் உதவி செய்தார். சரீரத்தின் பெலவீனம் அதிகரித்தது. ஒரு நாளைக்கு 4 முறை இன்சுலின் ஊசி, மாத்திரைகள் எடுக்கும் நிலை ஏற்பட்டது. இது தவிர குடும்பத்தினரின் ஆலோசனை, வளர்ந்த பிள்ளைகளின் ஆலோசனை, நண்பர்களின் ஆலோசனை என்னவென்றால் நீ ஏன் ஊருக்கு வந்து விடக்கூடாது. FMPB ஊழியத்தை தொடர்ந்து செய்ய இங்கும் நல்ல வாய்ப்புகள் உள்ளது என்ற அழைப்புகள். இதன் மத்தியிலும் இயேசு கிறிஸ்துவினால் நான் எதற்காக பிடிக்கப்பட்டேனோ அதைப் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய் தொடர்கிறேன் (பிலிப்பியர் 3:12) என்ற வசனத்தின் படி என்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதே என் ஆசை.



## கிறிஸ்துவின் பாதுகாப்பை எப்பொழுதெல்லாம் உணர்ந்தீர்கள்?

அநேக நேரங்களில் தேவனுடைய பாதுகாப்பை நான் உணரமுடிந்தது. கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும்






உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது (பிலிப்பியர் 1:29). எனக்கு மிகவும் பிடித்தமான பைபிள் வசனத்தின்படி, பவுலின் ஊழியத்தின் மூலமாக பாடுபடுவதற்கும் கற்றுக் கொண்டேன். 2024 ஜுலை மாதத்தில் பகாயா பணித்தளத்தில் கட்டப்பட்ட ஆலய பிரதிஷ்டைக்காக திருநெல்வேலியிலிருந்து 24 பேர் கொண்ட குழு பணித்தளத்திற்கு வந்திருந்தனர். ஆலய பிரதிஷ்டை முடிந்து, ஆராதனை முடிவதற்குள் 9 பேர் கொண்ட வாலிபர்கள் ஆலயத்திற்குள் நுழைந்து மதமாற்றம் நடக்கிறது என்று அடித்து கூச்சலிட்டனர். நாங்கள் அவர்கள் கைக்குத் தப்பி வாகனத்தில் ஏறி விரைந்து அருகிலுள்ள சிறுவர் விடுதிக்கு நேராக பஸ்ஸை ஓட்டினோம். ஆனால் அவர்களும் தொடர்ந்து வந்து அனைத்து பஸ் கண்ணாடிகளையும் உடைத்து விட்டு, என்னை நோக்கி இவன்தான் இதற்கு காரணம் என்று சொல்லி என்னையும் அடித்து துன்புறுத்தினர். ஆனாலும் தேவன் உயிர் சேதம் இல்லாதபடி அனைவரையும் பாதுகாத்தார். **“கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது (2 கொரிந்தியர் 1:5).** எனது ஆசை கை, கால்கள் திடனாயிருக்கும் வரை, ஓட முடியாது என்ற நிலைக்கு வரும் வரை, உயிருள்ள வரை எனது ஓட்டத்தை சிறப்பாக முடிக்க விரும்புகிறேன். எனது லட்சியம் அநேக மால்டோ இளைஞர்களை அவர்களது திருச்சபைக்கு தலைவர்களாக உருவாக்கிவிட வேண்டும் என்பதே.

## கடைசியாக எங்கள் வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

இந்தப் பணியில் தொடர்ந்து ஈடுபடுத்திக் கொள்ள எங்களைப் போன்ற மிஷனெரிகள் தேவை. எங்களது இலக்கு 50 மிஷனெரிகளை 2030க்குள் கண்டுபிடிக்க வேண்டும். பாடுகளின் மத்தியிலும் பரமனின் பணி தொடர வேண்டும். நீங்களும் அழைக்கப்பட்டவர்களானால் உங்களையும் ஒப்புக்கொடுத்து பரமனின் பணி தொடர்ந்து நடந்திட, தேவசித்தம் உங்கள் வாழ்க்கையில் செயல்பட ஒப்புக்கொடுத்து வாருங்கள். நாம் இணைந்து அவர் நாமத்தை மகிமைப்படுத்துவோம். ஆமென்!

Rev. R. சிபி செல்வின் சாம்

# வீண் ஆராதனையை விட்டுவிடுங்கள்

-Rev. Daniel Gnanaprakasam

2nd WEEK MESSAGE



**"மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்" (மத்தேயு 15:9).**

ஆராதனை என்பது உயர்வான, தகுதியான ஒருவரை நேசிப்பது (Loving), கௌரவிப்பது (Honoring) மற்றும் கீழ்ப்படிவது (Obeying) ஆகும். கிரேக்க பதத்திலே, "Worship means to encounter with God and praise Him" (கடவுளைச் சந்தித்து அவரைப் புகழ்வதாகும்). ஆராதனையின் நாயகர், நம் ஆண்டவராகிய கர்த்தர் மட்டுமே (உபாகமம் 6:4). அவரே எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் (1 நாளாகமம் 16:25).

- ★ **ஆராதிக்க இடம் முக்கியமல்ல, ஆராதனைக்குரியவரே முக்கியம் (யோவான் 4:21).**
- ★ **ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்வதே ஆராதனையின் அளவீடாக இருக்க வேண்டும் (யோவான் 4:23).**
- ★ **ஆராதனையின் நோக்கம் கடவுளைச் சேவிப்பதும், அவரை மகிமைப்படுத்துவதுமாக இருக்க வேண்டும்.**

## ஏன் கடவுளை ஆராதிக்க வேண்டும்?

### I. IT IS FUNDAMENTALY THEOLOGICAL FACT:

படைப்புகளாகிய நாம் அனைவரும், படைப்பாளராகிய அவரைக் கட்டாயம் ஆராதிக்க வேண்டும். அவர் தந்த சுவாசத்தினாலேயே நாம் உயிரோடிருக்கிறோம் (யோபு 33:4). ஆகவே **"சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக" (சங்கீதம் 150:6).**

### II. IT IS IMMENSELY PRACTICAL HABIT:

பாவத்திலே விழுந்த நம்மை அவர் மீட்டெடுத்து இரட்சிப்பை அருளினதால் நாம் நம் வாழ்வின் மூலம் அவரை ஆராதிக்க வேண்டும். **"உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள்" (1 சாமுவேல் 7:3).**

### III. IT IS ULTIMATELY ANALYTICAL TRUTH:

பரலோக வாழ்வை நிச்சயித்துக் கொண்ட நாம் ஒவ்வொருவரும், ஒவ்வொரு நொடிப்பொழுதும் நம் வாழ்வையே ஆராதனையாக பகுப்பாய்வு செய்துக் கொள்ள வேண்டும். பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக நம்மை ஒப்புக்கொடுத்து அவரை ஆராதனை செய்ய வேண்டும் (ரோமர் 12:1).

## ஆராதனையால் ஏற்படும் நன்மைகள்:

- ★ கடவுளின் பிரசன்னத்தை அனுபவித்து, நம் ஆன்மாவுக்கு புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது (Expressing God's presence and regenerating our soul).
- ★ கடவுளின் அதிகாரத்தை அங்கீகரித்து, நம் வாழ்வைக் குறித்த நினைவூட்டலைக் கொடுக்கிறது (Recognizing God's power and realizing our life).
- ★ கடவுளோடு நம் ஐக்கியத்தை உறுதிப்படுத்தி, நம் வாழ்வை நித்திய வீட்டிற்கு நேராக நடத்துகிறது (Assuring closed bond with God and progressing our life to eternity)

## வேதத்திலே குறிப்பிடப்பட்டுள்ள ஆராதனை முறைகளாவன:

1. தவ்டா (Towdah) - பலியிடுதல் (offering sacrifice) (யாத். 26:6,7, ரோமர் 12:1)
2. யாதா (Yadah) - நீட்டிய கைகளால் வணங்குதல் (worship with extended hands) (யாத். 17:11, 1 தீமோ. 2:8)
3. பராக் (Barak) - முழங்கால் போடுதல் (or) குனிதல் (Kneeling or bowing) (யாத். 34:8, சங்கீதம் 5:7)
4. ஷபாக் (Shabach) - கெம்பீர சத்தம் (Loud exultation) (சங்கீதம் 47:1, ஏசாயா 12:6)
5. ஜமா (Zamah) - கடவுளுக்கு இசை செய்தல் (Making music) (சங்கீதம் 150:3-5, எபேசியர் 5:19)
6. ஹலால் (Halal) - கொண்டாடுதல் (Celebrating praise) (2 சாமு. 6:14, சங்கீதம் 149:3)
7. தெஹில்லா (Tehillah) - புகழ்ந்து பாடுதல் (Singing praises) (சங்கீதம் 22:25, ஏசாயா 61:1-3)

இத்தனைவிதமான ஆராதனைகளுக்கு மத்தியில், நமக்கு தலைப்பாக ஒரு புதிய ஆராதனை கொடுக்கப்பட்டுள்ளது. அது எந்தவொரு பலனையும், மன மாற்றத்தையும், மகிழ்ச்சியையும் தராத வீண் ஆராதனையாகும். அதாவது "worthless worship" or "vain worship". The word "worship" comes from "worthship" என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வீண் ஆராதனை என்பது இதயத்துடிப்பு இல்லாத உடலைப் போன்றது. ஆராதனை என்பது இதயத்தோடு

சம்பந்தப்பட்டது. அது இதயத்திலிருந்து வெளிப்படுவது.

★ **அது நம்மைப் பற்றியதல்ல; அது தேவனைப் பற்றியது.**
★ **உதடுகளால் உறவாடுவதல்ல; உள்ளத்தால் உணர்வது.**
★ **மனுஷரின் கற்பனைகளும், பிரமாணங்களுமல்ல; மாறாத கடவுளின் நித்திய பிரமாணங்களே**

என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வேதபாரகரையும், பரிசேயரையும் எச்சரிக்கிறார் (மத்தேயு 15:8, 9). நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிற நம்முடைய ஆண்டவரை ஆராதிக்கிற நாமும் நம்மையும், நம் ஆராதனையையும் ஒரு விசை ஆராய்ந்து பார்க்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

### I. WORSHIP IS NOT OUR PHYSICAL PRESENCE, BUT FOR THE AFFIRMATION OF GOD'S PRESENCE.

நம்முடைய தேவன் எங்கும் பிரசன்னமாயிருக்கிறார். எனினும் அவர் நம் ஒவ்வொருவருடனும் தனிப்பட்ட, ஆழமான உறவை விரும்புகிறார். அந்த ஆழமான உறவை ஏற்படுத்துவதற்கு ஆராதனை அவசியமாயிருக்கிறது. **“ஆராதனை என்பது தேவனை அழைப்பதாகும்”.**

**அவர் நம்மில் வாசமாயிருப்பதற்கு காரணிகளாவன:**

★ **அவருக்கு பயப்படும் பயம் (2 நாளாகமம் 19:7) ( CCTV-க்கு அல்ல )**
★ **அவர் விரும்பும் பரிசுத்தம் (சங்கீதம் 96:9) (பாவ இச்சைகள் அல்ல)**
★ **அவர் எதிர்பார்க்கும் பணிவு (சங்கீதம் 95:6) (ஆடம்பரங்கள் அல்ல)**

இத்தகைய செய்கைகளின் மூலம் நாம் நம்முடைய ஆராதனைகளிலே தேவனுடைய இருப்பை உறுதி செய்கிறோம். அப்பொழுது அவர் நம் நடுவிலே உலாவி நம் தேவனாயிருப்பார். நாம் அவர் ஜனமாயிருப்போம் (லேவி. 26:12)

### II. WORSHIP IS NOT A PERFORMANCE, BUT FOR THE TRANSFORMATION OF GOD'S INTERVENTION.

உண்மையாய் தேவனை ஆராதிக்கிற ஒவ்வொருவருடைய வாழ்விலும், கடந்த கால பாவ பழக்கவழக்கங்கள் தலைக்காட்டாது. மனுஷ முயற்சிகளைக் கடந்த மாற்றங்கள் கடவுளின் தெய்வீக தலையீட்டினால் நிகழ்கிறது. ஏனென்றால் “ஆராதனை என்பது தேவனை தரிசிப்பதாகும்”. அது தேவனைப் புறந்தள்ளாது. அவரை உள்வாங்கிக் கொள்ள உணர்த்தும்.

அதினால் ஏற்படும் மாற்றங்களாவன:

★ **சொற்களில் (யோபு 33:3) (வார்த்தை ஜாலங்கள் அல்ல)**
★ **செயல்களில் (கலாத்தியர் 6:17) (சுய விருப்பங்கள் அல்ல)**
★ **சிந்தையில் (பிலிப்பியர் 2:5) (மாம்ச சிந்தைகள் அல்ல)**

இத்தகைய மாற்றங்கள் நம் அன்றாட வாழ்வின் அடையாளமாக மாறிவிடும். அது பழைய மனுஷனைக் களைந்து போட்டு, புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளும் (கொலோசெயர் 3:9, 10).

### III. WORSHIP IS NOT A PRETENSION, BUT FOR THE INTENTION OF GOD'S PLANS.

கடவுளை ஆராதிப்பது என்பது இதயப்பூர்வமானது. அதனை உடல் மொழியால் வெளிப்படுத்துவதை விட, உணர்வுப்பூர்வமாக தேவனின் பிரதிபலிப்பாக வெளிப்படுத்த வேண்டும். ஏனென்றால் “ஆராதனை என்பது தேவனை பிரதிபலிப்பதாகும்”. அதாவது வாழ்வே நடமாடும் சுவிசேஷம். அதுவே சீஷத்துவத்தின் அர்த்தமாகும். அது பாசாங்குத்தனங்களை வெளிப்படுத்தாது. தேவனுடையத் திட்டங்களை நிறைவேற்ற ஆவல் கொள்ளும்.

நம்முடைய நோக்கங்களாக மாற்றம் பெறுவன:

★ **பரலோக வீடே (பிலிப்பியர் 3:20) (இவ்வுலகமல்ல)**
★ **ஆவிக்குரிய ஆசீர்வாதமே (எபேசியர் 1:3) (உலக ஆஸ்திகளல்ல)**
★ **தேவ நீதியும், இரக்கமுமே (தீத்து 3:5) (உலக மேன்மையல்ல)**

ஆராதனை நம் வாழ்வின் நோக்கங்களை அர்த்தமுள்ளதாக மாற்றுகிறது. அது எதிர்கால நித்திய நம்பிக்கைக்கு நேராக நம்மை வழிநடத்துகிறது. நித்திய நியாயாதிபதியாகிய நம் கர்த்தர் நித்திய ஜீவ கிரீடத்தை நமக்கு தந்தருளுவார் (2 தீமோத்தேயு 4:7) என்ற நோக்கத்தோடு ஆராதிப்போம்.

பிரியமானவர்களே, நம்முடைய ஆராதனைகளிலே சரீர இருப்பை உறுதி செய்கிற நாம், இருதயத்தில் கடவுளின் உள்ளிருப்பை உறுதி செய்து ஆராதிக்கிறோமா? நம்முடைய செயல்திறன்களை வெளிப்படுத்தி ஆராதிக்கிற நாம், இருதயத்திலே கடவுளின் செயல்பாட்டிற்கு இடம் கொடுத்து ஆராதிக்கிறோமா? மற்றவர்களுக்கு முன்பாக அலங்காரமாய் காணப்படும் நம்முடைய ஆராதனைகளிலே தேவனுக்குப் பிரியமான தகுதிகள் காணப்படுகிறதா?

**Worship is an inward feeling and outward action that reflects the worth of God. That is the real worship, our worship must be worthy.** எனவே வீண் ஆராதனையை விட்டு விடுங்கள். ஆமென் !





# பஹாரி ராஜ்புத் மக்கள்

| | |
|---|---|
| மக்கள் தொகை | : 30 மில்லியன் |
| மதம் | : இந்து |
| மொழி | : பஹாரி, ஹிந்தி |
| கிறிஸ்தவர்கள் | : மிக குறைவு |
| வாழும் மாநிலங்கள் | : ஹிமாச்சல் பிரதேசம், ஜம்மு, காஷ்மீர் |

உயர் குல மக்கள் மத்தியில் நமது பணி

Mrs. Sheela Daniel

பஹாரி ராஜ்புத் மக்கள் இந்தியாவிலுள்ள உயர் வகுப்பைச் சேர்ந்த குடிமக்களாவர். இவர்களுக்கு தாக்கூர், ரானா, மேத்தா, சூட், மஹாஜன், குப்தா என்கிறதான குடும்பப் பெயர்களும் உண்டு. விவசாயம், தோட்டக்கலை, கல்வி சாலைகள் நடத்துதல் போன்ற தொழில்களைச் செய்து வருகிறார்கள். இவர்கள் வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறையில் பெரும் நில உரிமையாளர்களாகவும், சிறு மற்றும் குறுந்தொழில்களில் முதன்மை வகிப்பவர்களாகவும் உள்ளனர். இவர்கள் அரசியலில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள்.

**மத நம்பிக்கை:**

இந்து கடவுள்களை வணங்குதல், உள்ளூர் தெய்வங்களை வழிபடுதல், குரு வணக்கம், ஆவி வணக்கம் போன்றவை இம்மக்களிடம் காணப்படுகிறது. சமூகத்தில் முக்கியமான முடிவுகளை எடுப்பவர்களாக, தங்களது ஆன்மீக நம்பிக்கைகளில் உறுதியானவர்களாக உள்ளனர்.

**வாழ்க்கை முறை:**

சாராயம் குடித்தல், விபச்சாரத்தில் ஈடுபடுதல், தங்களது இனத்தைக் குறித்து பெருமைக் கொள்தல், தாழ்ந்த பிரிவினரை துர்ப்பிரயோகம் செய்தல் போன்றவை இம்மக்களிடம் காணப்படுகிறது.


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூலம் ஹிமாச்சல் மாநிலத்தில் இம்மக்கள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவித்து வருகிறோம். இவர்களிடம் சுவிசேஷத்திற்கு மிக குறைவான வரவேற்பு தான் உள்ளது. இவர்கள் மிகக் குறைந்த அளவிலே நமது திருச்சபைகளில் பங்கு பெறுகின்றனர். இம்மக்கள் மத்தியில் சில விசுவாச குடும்பங்கள் தான் நமக்குண்டு. கடினமான இம்மக்கள் மத்தியில் கர்த்தர் பெரும் அறுவடையைத் தர ஜெபிப்போம். "கர்த்தர் சொல்லுகிறார், எனக்குமுன் ஏற்பட்ட தேவன் இல்லை; எனக்குப்பின் இருப்பதும் இல்லை. நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் இரட்சகர் இல்லை" (ஏசாயா 43:10(b), 11). இவ்வசனத்தின் படி பஹாரி ராஜ்புத் மக்கள் கர்த்தரை இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும், அவருடைய ராஜ்யத்துக்கு பங்குள்ளவர்களாக மாறவும் ஜெபிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்:

- பஹாரி ராஜ்புத் மக்கள் கர்த்தரே தேவனென்று அறிந்து ஏற்றுக்கொண்டு, அவரில் நம்பிக்கை உள்ளவர்களாக மாற ஜெபிப்போம்.
- சாராயம், விபச்சாரம் போன்ற பாவப்பழக்கத்திலிருந்து விடுதலைப்பெற்று, பரிசுத்த ஜனமாக வாழ ஜெபிப்போம்.
- ஆவி வணக்கம், குரு வணக்கம், உள்ளூர் தெய்வங்களை வழிப்படுதல் போன்ற மூடப்பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற ஜெபிப்போம்.
- சமுதாயத்தில் அதிகாரத்தைக் கொண்ட இம்மக்கள் எடுக்கும் முக்கிய முடிவுகள் சரியாகவும், பொதுமக்களுக்கு நன்மைத் தரக்கூடியதாகவும் அமைய ஜெபிப்போம்.
- இவர்கள் குடும்பங்களிலுள்ள இளம் வாலிபர்கள், வாலிபர்கள் போதைப் பொருட்கள், விபச்சாரம் போன்ற பாவங்களுக்கு அடிமையாகாமல், கர்த்தருக்குப் பயந்து வாழ ஜெபிப்போம்.
- ஹிமாச்சல் மாநிலத்தில் ராம்பூர், தானேதர், ஜியோரி, ரிகாங்பியோ, ஆனி மற்றும் கர்சோக் பணித்தளத்தில் நடைபெறும் நமது ஊழியங்களின் மூலம் இவர்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.
- சுவிசேஷத்திற்கு மிக குறைவான வரவேற்பு காணப்படுவதால், திறந்த வாசல் இவர்கள் மத்தியில் உண்டாக ஜெபிப்போம்.
- இயேசுவை ஏற்றுக் கொண்ட சில விசுவாச குடும்பங்கள், ஆசையோடு ஆராதனைகளில் கலந்து கொள்ளவும், தங்கள் மக்கள் மத்தியில் கர்த்தருக்கு சாட்சியாக வாழவும் ஜெபிப்போம்.
- இம்மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிற நமது இயக்கத்தின் ஊழியர்களுக்கு தேவையான பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் சுவிசேஷத்தை அறிவிக்க ஞானம், வல்லமை, தைரியத்தை கர்த்தர் தந்தருள ஜெபிப்போம்.
- இம்மக்கள் மத்தியிலிருந்து ஊழியர்கள் எழும்பவும், திருச்சபை பெருகவும், திரளான விசுவாசக் குடும்பங்கள் கர்த்தரை ஆராதிக்கவும் ஜெபிப்போம்.

# கர்நாடகா மாநிலம்

**"கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்" (ஆதியாகமம் 49:18)**



**புள்ளி விபரங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| தலைநகர் | : பெங்களூரு | மாவட்டங்கள் | : 31 |
| கிறிஸ்தவர்கள் | : 1.87% | இந்துக்கள் | : 84% |
| மக்கள் தொகை | : 6.11 கோடி | கிராமங்கள் | : 33,182 |
| முகமதியர் | : 12% | | |

**துதிப்போம்:**

- மதமாற்றத் தடைச்சட்டம் ரத்து, மத நல்லிணக்கம், சிறுபான்மையினர் பாதுகாப்பு போன்ற அறிவிப்புகளை புதிய அரசு வெளியிட்டுள்ளதற்காக...
- இந்தியாவின் ஐ.டி. துறையின் தலைமையிடமாக இருப்பதற்காக துதிப்போம்.

**ஜெபிப்போம்:**

- மாநிலத்தில் வலுவான கட்டமைப்பைக் கொண்ட மதவாத அமைப்புகள் செயலிழந்து போகவும், பொது மக்கள் அவர்களை நிராகரிக்கவும்...
- எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பவும், உபத்திரவப்படுவோருக்கு தேவன் தாமே பக்கத்துணையாக இருக்கவும், உபத்திரவத்தைத் திட்டமிட்டுச் செய்யும் மதவாதிகளின் வாழ்வில் தேவ கரம் குறுக்கிடவும்...
- ஊழியங்கள் பெருகவும், ஜனங்களின் மனந்திரும்புதலுக்காகவும்...
- நீர் ஆதாரங்களைக் குறித்த அண்டை மாநிலங்களுடனான பிரச்சினையில் சுமூகத் தீர்வு ஏற்பட ஜெபிப்போம்.

**நமது ஊழியம்:**

கர்நாடகா மாநிலத்தில் நடைபெறும் நமது இயக்கத்தின் ஊழியங்களில் இம்மட்டும் கர்த்தர் தந்துள்ள ஆசீர்வாதங்களுக்காக அவரைத் துதிப்போம்.


- விசுவாசிகள் : 19,648
- சுதேச ஊழியர்கள் : 40
- ஆலயங்கள் : 27
- ஆராதனைக் குழுக்கள் : 374

**நமது ஊழியத்திற்கான ஜெபம்:**

- இங்கு பணி செய்யும் நமது 31 பணித்தள ஊழியர்களையும், முன்னேற்றப்பணி ஊழியங்களைச் செய்து வரும் 12 ஊழியர்களையும் தேவன் ஆசீர்வதித்து பயன்படுத்த ஜெபிப்போம்.
- 2030ஆம் ஆண்டின் தரிசனம் நிறைவேற ஜெபிப்போம். விசுவாசிகள் 19,729; சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட வேண்டிய மக்கள் 4,73,727; புதிய கிராமங்கள் 10,088; புதிய ஆராதனைக் குழுக்கள் 2,247; ஆலயங்கள் 52.

Mrs.Hepzi

உங்கள் மாவட்டமும் ஜெபத்தில் தாங்கப்படும் மாநிலமும்



# பாண்டிச்சேரி மாவட்டம்

**புள்ளி விபரங்கள்:**

| | |
|---|---|
| மக்கள்தொகை | : 12,47,953 |
| இந்துக்கள் | : 87.3 % |
| முகமதியர் | : 6 % |
| கிறிஸ்தவர்கள் | : 6.2 % |

**துதிப்போம்:**

- இம்மாவட்டத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு தேவன் தந்திருக்கும் ஆசீர்வாதங்களுக்காக, ஜெபக்குழுக்களுக்காக ஆண்டவரைத் துதிப்போம்.

**ஜெபிப்போம்:**

- இம்மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களும் இரட்சிக்கப்பட...
- சபைகளில் எழுப்புதல் காணப்பட்டு, அநேக வாலிபர்கள் மிஷனெரிகளாக புறப்பட்டுச் செல்ல...
- இங்குள்ள ஜெபக்குழுத் தலைவர்களுக்காக, அவர்களது குடும்பங்களுக்காக...
- இம்மாவட்டங்களிலுள்ள மேயர், மாநகராட்சி ஆணையர், அலுவலர்கள், அரசு ஊழியர்கள், வார்டு உறுப்பினர்கள், காவல் துறையினர், நீதித்துறையினர் ஆகியோர் நேர்மையுடன் பணிபுரிய ஜெபிப்போம்.



Mrs. Hepshi Baskar



பாவஞ்செய்கிற எவனும் பாவத்துக்கு அடிமையாக இருக்கிறான் (யோவான் 8:34)

# இளம் வாலிபர்கள் / இளைஞர்களின் அடிமைத்தனங்கள்

இந்தியாவின் மக்கள் தொகையில் 67% 35 வயதிற்கு கீழ் உள்ள இளைஞர்கள். இவர்கள் திறமைகள், இலட்சியங்கள், கனவுகளை கீழே விழத்தள்ள பிசாசானவன் கெர்ச்சித்து சுற்றித்திரிகிறான். எந்தெந்த காரியங்களுக்கு அடிமையாகிறார்கள் என்பதை அறிந்து அவர்களுக்காகத் திறப்பில் நின்று ஜெபிப்போமா? **மூன்று முக்கிய அடிமைத்தனங்கள் உடல் ரீதியான அடிமைத்தனம்**, நடத்தை சார்ந்த அடிமைத்தனம் மற்றும் மனத்தூண்டுதல் கட்டுப்பாட்டுக் கோளாறினால் தோன்றும் அடிமைத்தனம்:

**உடல் ரீதியான அடிமைத்தனம்:** ஆல்கஹால், புகையிலை, ஓபியாய்டு, மரிஜுவானா, பரிந்துரைக்கப்பட்ட போதைப் பொருள் உள்ளிழுக்கும் பழக்கம், PCP, ஆம்பெடமைன், கோகோயின் மற்றும் ஹாலுசினோஜன்.

**நடத்தை சார்ந்த அடிமைத்தனம்:** பாலியல் பிரச்சினை, உணவுக்கு அடிமையாதல், ஆபாச போதை, உடற்பயிற்சி, வேலை, சுய-தீங்கு, மத மூடநம்பிக்கை, ஷாப்பிங், வீடியோ கேம், சூதாட்டம் மற்றும் இணையதளம்

**உந்துவிசைக் கட்டுப்பாட்டுக் கோளாறினால் அடிமையாதல்:** இடைப்பட்ட வெடிப்புக் கோளாறு (கோபத்தை கட்டுபடுத்தாத நிலை), கிளெப்டோமேனியா, சூதாட்டம், பைரோமேனியா, ட்ரைக்கோட்டிலோமேனியா மற்றும் டெர்மட்டிலோமேனியா.

## போதை பொருள் அடிமை:

இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 14.6% (16 கோடி) மக்கள் போதைப் பொருளை பயன்படுத்துகிறார்கள். 8.5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்களுக்குள் போதைப்பொருட்களை செலுத்தி அதற்கு அடிமையாகிறார்கள். 10 முதல் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 30 லட்சம் பேர் மது அருந்துவதாகவும், 20 லட்சம் பேர் கஞ்சா நுகர்வதாகவும், 98 லட்சம் பேர் பிற போதைப் பொருட்களை பயன்படுத்துவதாகவும் ஒன்றிய அரசின் தகவல் தெரிவிக்கின்றது. உலகளவில் 39% போதைப் பொருள் நுகர்வுகளை தெற்காசிய நாடுகள் மேற்கொள்கின்றன. இதில் 90% மது மற்றும் போதைப் பொருள் பயன்படுத்துவது இந்தியா தான் என்று ஐ.நா சபை கூறுகிறது.

## இணையவழி விளையாட்டுகளுக்கு அடிமை:

இணையவழி விளையாட்டுகளை விளையாடுவோரின் எண்ணிக்கை இந்தியாவில் 2018-ஆம் ஆண்டு 18 கோடியாக இருந்த நிலையில், 2022-ஆம் ஆண்டு 42 கோடியாக அதிகரித்துள்ளது. ஆண்டுதோறும் 30% அதிகரிப்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. செல்போன்களை அதிகமாக பயன்படுத்துபவர்களுக்கு இருதய நோய் ஏற்படுவதற்கான ஆபத்து 21% அதிகரித்துள்ளது. யுனிசெஃப் ஆய்வறிக்கையின்படி 65 கோடி பெண்களில் 5-ல் ஒருவர் இணைய தளத்தின் வழியான பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகி இருக்கின்றனர்.

- தமிழகத்தில் 42 மாதங்களில் 3.28 லட்சம் கருக்கலைப்புகள் நடந்துள்ளது. உலகளவில் 40 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தகாத உறவினால், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**“தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்”** (சங்கீதம் 139:23, 24) என்ற வசனத்தின்படி ஆண்டவருக்கு பிரியமில்லாத அடிமைத்தன ஆவிகள் இருக்குமானால் நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து மனம் திரும்புவோம். உங்களை காண்கிறவர்கள் கிறிஸ்துவைக் காணும்படி கிறிஸ்துவிலே சிலுவையை நோக்கிப் பார்த்து பூரணப்படுவோம்.

## ஜெபக்குறிப்புகள்

- வாலிபர்கள் பாவத்திற்கு அடிமையான நிலையிலிருந்து மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு, இயேசுவின் உண்மையான சீடர்களாக மாற ஜெபிப்போம்.
- ஆபாச திரைப்படங்கள் மூலம் இச்சைகளுக்கும், ஆக்சன் படங்கள் மூலம் வன்முறையில் ஈடுபடுவதற்கும் உட்படுத்தப்படுகிற பொல்லாத அசுத்த ஆவிகள் தேசத்திலிருந்து முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.
- சுயபுணர்ச்சி பழக்கத்திற்கு அடிமைப்படுத்தி இளையோரைப் பெலவீனப்படுத்துகிற, இதினிமித்தம் குற்ற உணர்வுக்குள்ளாகி மனச்சாட்சியை வாதிக்கிற பிசாசின் தந்திரங்கள் செயலற்று போக ஜெபிப்போம்.
- விபச்சாரம், வேசித்தனம் போன்ற பாவ பழக்கத்திற்கு வாலிபர்களை உட்படுத்தி, எய்ட்ஸ் நோயை தீவிரமாக பரப்பி வாழ்வை சீரழிக்கிற பிசாசின் தந்திரங்கள் முறியடிக்கப்பட ஜெபிப்போம்.
- இளைய தலைமுறையினரை அடிமைப்படுத்தும் இச்சையின் ஆவியும், அடிமைத்தனத்தின் சங்கிலியும், ரம்மி விளையாட்டிற்கு அடிமையாகும் நிலையும் மாற ஜெபிப்போம்.
- குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற, போதை மருந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் நிரந்தரமாக மூடப்பட, கடத்தல் முற்றிலுமாக தடை செய்யப்பட, வாலிபர்கள் காக்கப்பட, அரசு துரிதமாக செயல்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்க ஜெபிப்போம்.
- செல்ஃபி மோகத்தால் தங்கள் உயிரை பணயம் வைத்து பிரபலமாக துடிக்கும் வாலிபர்கள் இந்த அடிமைத்தனத்திலிருந்து வெளிவர ஜெபிப்போம்.

# ஐக்கிய நாடுகள் (United Nations)

Ms. Beaulah & Ms. Lilly

ஐக்கிய நாடுகள் (UN) உலகின் மிகப்பெரிய சர்வதேச அமைப்பாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல், சர்வதேச ஒத்துழைப்பை அடைதல் மற்றும் உறுப்பு நாடுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் மையமாகச் செயல்படுதல் போன்ற நோக்கங்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐ.நா., எதிர்காலத்தில் உலகப் போர்களைத் தடுக்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்டது. நாடுகளுக்கிடையே அமைதியைக் காக்கும் பணியைத் தவிர, ஆயுதக் குறைப்பை ஊக்குவிப்பதிலும் ஐ.நா கவனம் செலுத்துகிறது. இது 193 உறுப்பு நாடுகளையும், 2 பார்வையாளர் நாடுகளையும் கொண்டுள்ளது. UNO-இன் தலைமையகம் நியூயார்க் நகரில், 26 ஜூன் 1945-ல் கையொப்பமிடப்பட்டு, 24 அக்டோபர் 1945-ல் நடைமுறைக்கு வந்தது. இது ஜனாதிபதி ஃபிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட், ஈரானின் தெஹ்ரானில் சோவியத் பிரதமர் ஜோசப் ஸ்டாலினை 1943 நவம்பரில் சந்தித்தபோது ஒரு சர்வதேச அமைப்பை முன்மொழிந்தார். அனைத்து உறுப்பு நாடுகளின் சட்டமன்ற, சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள் பற்றி விவாதிக்க, 10 பேர் கொண்ட நிர்வாகக் குழுவை உள்ளடக்கியது.

அறிக்கைகளின்படி, 1947 முதல் ஐ.நா. 71 அமைதி காக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது, ஏப்ரல் 2021-ன் நிலவரப்படி, 121 நாடுகளைச் சேர்ந்த 88,000 அமைதி காக்கும் பணியாளர்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்தியா மற்றும் பாகிஸ்தானிலுள்ள ஐக்கிய நாடுகளின் இராணுவ பார்வையாளர் குழு (அல்லது UNMOGIP), ஜம்மு மற்றும் காஷ்மீரில் போர்நிறுத்தத்தை கண்காணிக்கும் பொறுப்பில் உள்ள 113 பொதுமக்கள் மற்றும் நிபுணர்களைக் கொண்டுள்ளது.

**ஐ.நா. ஆறு முக்கிய செயல்பாட்டு அமைப்புகளை உள்ளடக்கியது:** பொதுச் சபை, பாதுகாப்பு கவுன்சில், பொருளாதார மற்றும் சமூக கவுன்சில், சர்வதேச நீதிமன்றம், ஐ.நா செயலகம் மற்றும் அறங்காவலர் கவுன்சில், (அறங்காவலர் கவுன்சில் 1994 முதல் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது) உலக வங்கி குழு, உலக சுகாதார நிறுவனம், உலக உணவுத் திட்டம், யுனெஸ்கோ மற்றும் யுனிசெஃப் உள்ளிட்ட பல சிறப்பு முகமைகள், நிதிகள் மற்றும் திட்டங்களை உள்ளடக்கியது. கூடுதலாக, அரசு சாரா நிறுவனங்களுக்கு பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் மற்றும் பிற ஏஜென்சிகளுடன் ஆலோசனைத் தரும் அந்தஸ்தும் உள்ளது.


ஐ.நா.-வின் அதிகாரிகள் பலர் அமைதிக்கான நோபல் பரிசுகளை வென்றவர்களாக இருக்கின்றனர், இருப்பினும் ஒரு அமைப்பாக அதன் செயல்திறன் பற்றிய மற்ற மதிப்பீடுகள் சர்ச்சைக்குரியதாக காணப்படுகிறது. இவ்வமைப்பு அதன் உறுப்பு நாடுகளின் மதிப்பீடு மற்றும் தன்னார்வ பங்களிப்புகளால் நிதியளிக்கப்படுகிறது. 2024-ம் ஆண்டிற்கான ஐ.நா.வின் பட்ஜெட் நன்கொடைகள் தவிர்த்து $3.59 பில்லியன் ஆகும். சில வர்ணனையாளர்கள் இந்த அமைப்பு அமைதி மற்றும் மனித வளர்ச்சியில் முன்னணியில் இருப்பதாக நம்புகிறார்கள், மறுபுறம் அது பயனற்ற தன்மை, பாரபட்சம் மற்றும் ஊழலுக்காகவும் விமர்சிக்கப்படுகிறது.

## ஜெபக்குறிப்புகள்

* சர்வதேச அமைதி, பாதுகாப்பைப் பேணுதல், நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல், சர்வதேச ஒத்துழைப்பை மற்றும் உறுப்பு நாடுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணிகளில் தேவ கரமிருக்கவும் தேவ சித்தம் விளங்கவும் ஜெபிப்போம்.
* ஐ. நா. மற்றும் உலக வங்கி குழு, உலக சுகாதார நிறுவனம், உலக உணவுத் திட்டம், யுனெஸ்கோ, யுனிசெஃப் ஆகியவற்றின் தலைவர்கள் மற்றும் அமைதி காக்கும் பணியாளர்கள், தன்னார்வ பங்களிப்பாளர்கள் அனைவரும் தேவனுக்குப் பயந்து, சுயலாபங்களுக்கின்றி, நாடுகளின் நலனுக்காக செயல்பட ஜெபிப்போம்.
* உறுப்பு நாடுகளின் சட்டமன்றம், உலக சுகாதாரம், சமூக மற்றும் பொருளாதார பிரச்சனைகளில் ஐ.நா. சபை பாரபட்சமின்றி, ஊழலின்றி, நடுநிலைமையோடும், நீதியோடும் நடந்துக் கொள்ள ஜெபிப்போம்.



Mrs. Stephy



# வியட்நாம்

அதிக உபத்திரவங்களைச் சந்திக்கும் நாடுகளில் ஒன்றான வியட்நாம் தேசத்திற்காக இந்த மாதம் ஜெபிப்போம். வியட்நாமில் உள்ள கிறிஸ்தவர்கள் கடுமையான துன்புறுத்தல்களைச் சந்திக்கிறார்கள். அதில் வன்முறை, கைது, மற்றும் கிறிஸ்தவ மதத்தை விட்டு விலகுவதற்கு கட்டாயப்படுத்துதல் ஆகியவையும் அடங்கும். புதிதாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டவர்கள், தங்கள் வீடுகள் மற்றும் கிராமங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். மேலும் அத்தியாவசிய சமூக சேவைகள், மின்சார வசதிகள் மற்றும் கல்வி அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. இவ்வாறு அதிகாரிகள் அவர்களை தங்கள் நம்பிக்கைகளை விட்டு விலகச் செய்ய முயல்கின்றனர். இந்த துன்புறுத்தல் சிறுபான்மையின பழங்குடிகள், குறிப்பாக ஹமாங் போன்றவர்கள் மீது மிகவும் கடுமையாக உள்ளது. இந்த சவால்களைத் தாண்டியும், கிறிஸ்தவ சமூகம் வளர்ந்து வருகின்றது.

வியட்நாமின் மொத்த மக்கள்தொகை 10 கோடிக்கும் மேல். அதில் கிறிஸ்தவர்கள் சுமார் 7% - 9.7% (9.6 மில்லியன் மக்கள்) ஆக உள்ளனர். பெரும்பாலான மக்கள் புத்தமதத்தை பின்பற்றுகின்றனர். மேலும் அரசின் கொள்கைகள், மதசார்பற்ற சுதந்திரங்களை மேலும் கட்டுப்படுத்துகின்றன. அதனால் கிறிஸ்தவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி உள்ளது. அரசின் கவனத்தை ஈர்க்காமல் இருக்க, பலர் இரகசியமாக வீட்டு தேவாலயங்களில் ஆராதனைக்கு கூடுகின்றனர். இந்த இரகசிய சமூகம், குறிப்பாக புராட்டஸ்டண்ட் குழுக்களால் நடத்தப்படும் தேவாலயங்கள், அதிகாரிகளால் மூடப்படும் போது மிகுந்த அழுத்தத்துக்குள்ளாகின்றது. 2017-ம் ஆண்டில், சில மாகாணங்களில் வீட்டு தேவாலயங்கள் மூடப்பட்டு, கிறிஸ்தவ நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

முப்படைச் சேவையில் உள்ள கிறிஸ்தவர்கள் கூடுதலான கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகின்றனர். அவர்கள் கிறிஸ்தவ வழிபாடுகளில் பங்கேற்கவோ அல்லது வேதத்தை படிக்கவோ முடிவதில்லை. பழங்குடி பின்னணியிலிருந்து வந்த கிறிஸ்தவ பெண்கள், குடும்பத்தின் மூலம் பல அழுத்தங்களை எதிர்கொள்கிறார்கள். அதில் தங்கள் நம்பிக்கையை விட்டு விலக வற்புறுத்துதல், நிர்ப்பந்தத் திருமணங்கள், வீட்டு வன்முறை மற்றும் பாலியல் வன்முறை போன்றவை அடங்கும். சிறுபான்மையின மத மற்றும் இன மக்களை குறிவைத்து சீனாவிற்கு மனிதர்களை கடத்துதலும் நடக்கிறது.

கிறிஸ்தவர்கள் பொதுவாக கிராமப்புறங்களில் சமூக புறக்கணிப்பிற்கு உள்ளாகின்றனர். அவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் சுகாதார சேவைகளில் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் பாரம்பரிய புத்தமதச் சடங்குகளால் அவர்களின் குடும்பம் மற்றும் சமூகத்தால் வெளியேற்றப்படுகிறார்கள். அவ்வாறே கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கையுடன் உறுதியாக நிற்கின்றனர். இவர்களுக்காக ஜெபிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்

- சிறுபான்மையின கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ நம்பிக்கையில் உறுதியாக இருக்கவும், தேவன் அவர்களைப் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.
- வன்முறைகள், சிறைச்சாலைகள், மற்றும் மிரட்டல்களை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்கள், குறிப்பாக தொலைவான மற்றும் கிராமப்புற பகுதிகளில் இருப்பவர்களின் பாதுகாப்பிற்காகவும், தேவன் அவர்களுக்கு பெலனும், துணிவும், சகிப்புத்தன்மையும் அளிக்கவும் ஜெபிப்போம்.
- கிறிஸ்தவர்கள் தங்களை சுற்றியுள்ள மக்களுக்கு வெளிச்சமாக இருக்கவும், அவர்கள் கிறிஸ்துவின் அன்பையும், நம்பிக்கையையும் மற்றவர்களுக்கு அறிவிக்கவும் ஜெபிப்போம்.
- தேசத்தில் உள்ள கம்யூனிஸ்ட் தலைவர்கள் கிறிஸ்தவ சமுதாயத்தைப் புரிந்துகொண்டு மதசார்பற்ற சுதந்திரத்தை அளிக்க ஜெபிப்போம்.
- வியட்நாமின் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் தலைவர்கள் மனம் மாறவும், சுவிசேஷப் பணி தொடர்ச்சியாக வளர்ந்து பரவவும் ஜெபிப்போம்.
- துன்புறுத்தலின் காரணமாக உடல், உணர்ச்சி மற்றும் உளவியல் வலிகளை அனுபவித்து வரும் கிறிஸ்தவர்கள் குணமடையவும், அத்தகைய சோதனைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் மீட்டெடுக்கப்படவும் ஜெபிப்போம்.
- தேவனுக்கு விரோதமாக எழும்புகிறவர்கள் தேவன் பக்கம் திருப்பப்படவும், பரலோக ராஜியத்திற்கு பங்குள்ளவர்களாக மாறவும் ஜெபிப்போம்.





INTERNATIONAL JUSTICE MISSION INDIA (IJM INDIA)

# சர்வதேச நீதித் திட்டம்

Mrs. Beryl

இண்டர்நேஷனல் ஜஸ்டிஸ் மிஷன் இந்தியா என்பது உள்ளூர் அரசாங்கங்கள், சட்ட அமலாக்க முகமைகள், பெருநிறுவனங்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களுடன் இணைந்து மனித கடத்தல், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தீர்வுகளைப் புரிந்துகொள்வது, அடையாளம் காண்பது போன்ற குற்றங்களில் குறிப்பிட்ட கவனம் செலுத்தும் அமைப்பாகும்.

★ 2011-ம் ஆண்டு முதல், சர்வதேச நீதித் திட்டம் இந்தியா, மனிதக் கடத்தலுக்குத் தீர்வு காண அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

★ பிரிவு 8 நிறுவனமாக, சர்வதேச நீதி மிஷன் இந்தியா 2013-ம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின்படி செயல்படுகிறது, இது மனித கடத்தலை எதிர்த்துப் போராடுவதற்கான பணியில் நெறிமுறை நடைமுறைகள் மற்றும் சமூகப் பொறுப்புக்கான தங்களது உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

★ மாநில மற்றும் மாவட்ட அரசாங்க அதிகாரிகள், அரசு வழக்கறிஞர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கான தொழில்நுட்ப ஆலோசனைகள், நீதித்துறை ஆலோசனைகள், மாநாடுகள், பட்டறைகள் மற்றும் பயிற்சிகள் ஆகியவற்றில் IJM இந்தியா அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுகிறது. கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் பிற அரசாங்க வாழ்வாதாரத் திட்டங்கள் குறித்த அரசாங்க ஆய்வுகளுக்கான தொழில்நுட்ப ஆலோசகராகவும் IJM இந்தியா இருந்து வருகிறது.

**முன்னெடுக்கும் சமூக சேவைகள்:**

•**தொழில்நுட்ப ஆலோசனை:** தொழில்நுட்ப ஆலோசகர்கள் என்ற முறையில், பாதிக்கப்பட்ட மக்களை பல்வேறு வகையான ஆட்கடத்தலில் இருந்து பாதுகாக்கும் நிலையான தீர்வுகளை அரசு மற்றும் அரசு சாரா பங்குதாரர்களுக்கு வழங்குதல்.

•**கடத்தல் எதிர்ப்பு நிபுணத்துவம்:** நிபுணத்துவம் நிறைந்த பங்கேற்பு மாதிரிகள் மற்றும் கருவிகளை உருவாக்குதல், தரவு மேலாண்மை மற்றும் ஆலோசனை மற்றும் பல்வேறு அரசு வாழ்வாதார திட்டங்களுக்கு ஆதரவளிப்பது ஆகியவற்றை உள்ளடக்கியது.

•**சட்ட சேவைகள்:** மனித கடத்தல் தொடர்பான சட்ட சேவைகள் வழங்கப்படுகிறது. பாலியல் கடத்தல், கட்டாய உழைப்பு, அடிமைத்தனம், காவல்துறை அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், சொத்து திருட்டு மற்றும் குடியுரிமை உரிமைகள் போன்ற வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களைச் சர்வதேச நீதித் திட்டம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இது நீதி அமைப்புகளை மேம்படுத்த வளரும் நாடுகளின் அரசாங்கங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

•**பயிற்சி மற்றும் பட்டறைகள்:** அங்கீகரிக்கப்பட்ட அறிவுசார் துணையாக, மாவட்டம், மாநில, தேசிய அரசாங்கங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில், மனித கடத்தலைக் கையாள்வது குறித்த பயிற்சி, ஆலோசனைகளை வழங்குகிறது.

## ஜெபக்குறிப்புகள்

1. **IJM இன் பணிக்கு நன்றி:** IJM இந்தியாவின் அர்ப்பணிப்புக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணியம் மற்றும் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்கான அவர்களின் அர்ப்பணிப்புக்காகவும்,

2. **தலைவர்களுக்கான ஞானம்:** IJM தலைவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தெய்வீக வழிகாட்டுதல் மற்றும் ஞானத்திற்காகவும், அவர்கள் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் எடுக்கும் முயற்சிகளுக்காகவும்,

3. **மீட்புக் குழுக்களுக்கான பாதுகாப்பு மற்றும் பலம்:** பாதிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்காக ஆபத்தான சூழ்நிலைகளில் மீட்புக் குழுக்கள் நுழையும்போது, அவர்களின் பாதுகாப்பிற்காகவும், சவாலான சூழ்நிலைகளில் அயராது உழைக்கும் IJM ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் புதுப்பிக்கப்பட்ட வலிமை மற்றும் ஊக்கத்தைப் பெற்றுக் கொள்ளவும்,

4. **உயிர் பிழைத்தவர்களுக்கான ஊக்கம்:** தப்பிப் பிழைத்தவர்களுக்கு உணர்ச்சி, உடல் மற்றும் ஆன்மீக சிகிச்சை வழங்கப்படவும், நம்பிக்கை மற்றும் நெகிழ்ச்சியுடன் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டமைக்கவும்,

5. **விழிப்புணர்வு மற்றும் கூட்டாண்மை:** ஆட்கடத்தலின் அறிகுறிகள் குறித்து சமூகங்கள் மற்றும் தனிநபர்கள் அதிகம் அறிந்து அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவும்,

6. **அதிகாரிகளுடனான ஒத்துழைப்பு:** அநீதிக்கு எதிராக ஒரு ஒருங்கிணைந்த புரிதலை உருவாக்க IJM மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள், காவல்துறை மற்றும் NGO-க்களுக்கு இடையே வலுவான கூட்டாண்மைகளுக்காகவும்,

7. **ஆட்கடத்தலை ஒழித்தல்:** இந்தியாவில் கடத்தல் நெட்வொர்க்குகளை அகற்றுவதற்கும், கட்டாய உழைப்பை ஒழிப்பதற்கும் வழிவகுக்கும் IJM இன் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்கவும்,

8. **மறுசீரமைப்பு மற்றும் செழிப்பு:** பாதிக்கப்பட்டவர்களின் முழுமையான மறுசீரமைப்பிற்காகவும், அவர்கள் பயம் மற்றும் அடக்குமுறை இல்லாத செழிப்பான வாழ்க்கையை வாழ உறுதியான வழி செய்யவும் ஜெபிப்போம்.

# கவலைப்படாதிருங்கள்



நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து செய்த பிரசங்கங்களில் மலைப்பிரசங்கம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இவ்வுலகில் வாழ்வதற்குத் தேவையான எல்லா வாழ்க்கைத் தத்துவங்களும் இதில் அடங்கியிருக்கிறது. இன்றைய காலக்கட்டத்தில் வளரும் நவீன கால குருக்கள் அனைவருமே இந்த மலைப்பிரசங்கத்திலிருந்து ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, தங்களின் சொந்த கருத்துக்களையும் சிறிது சேர்த்துப் பேசி மக்களிடம் பிரபலமாகி விடுகிறார்கள். நமது ஆவிக்குரிய வாழ்க்கை என்பது நமது தனிப்பட்ட வாழ்க்கை எப்படி இருக்கிறதோ, அதனுடைய பிரதிபலிப்பாகவே இருக்கிறது.

நாம் ஆவிக்குரிய வாழ்வில் வளர்வதற்குப் பல தடைகளை அன்றாட வாழ்வில் சந்திக்க வேண்டியுள்ளது. அவைகளில் ஒன்று தான் கவலை. எதிர்மறையான சிந்தனைகளை மனதிற்குள் வைத்து மனஉளைச்சல் ஆவதே கவலையாகும். ஆண்டவர் தன்னுடைய மலைப்பிரசங்கத்திலும் இதை மேற்கோடிட்டுக் காட்டுகிறார். இந்த உலகில் மனிதனாக பிறந்த அனைவரையும் கவலை என்பது ஏதோ ஒரு வகையில் வந்து தாக்குகிறது. அது யாரையும் விட்டு வைப்பதில்லை. வேதாகமத்தில் தாவீது ராஜாவுக்கும் மனதில் கவலையிருந்தது. **“என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்? எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்?” (சங்கீதம் 13:2).** இந்த வசனத்தில் என் இருதயத்திலே சஞ்சலத்தை எதுவரைக்கும் வைத்து கொண்டிருப்பேன்? என்று தாவீது ராஜா அங்கலாய்க்கிறார். அவர் தன் கவலையை மேற்கொள்ளக் கர்த்தரிடம் ஜெபம் செய்தார். மத்தேயு 6:27-ல் **“கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?”** என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

நம்முடைய கவலை 3 முக்கிய தேவைகளான உணவு, உடை, வீடு (சொத்துகள்) இவைகளைக் குறித்ததாகவே இருக்கிறது. இம்மூன்றும் நம்முடைய வாழ்க்கையின் அடிப்படை தேவைகளாக இருப்பதால் நாம் மிகவும் கவலைப்படுகிறோம்.

### 1.நமது ஜீவன், உணவைக்காட்டிலும் மேலானது (மத்தேயு 6:25).

**“என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காக கவலைப்படாதிருங்கள்”** (மத்தேயு 6:25). **“அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்”** (யோவான் 6:27) என்ற வசனங்களின் படி கெட்டுப்போகும் உணவுக்காக உழைக்காமல், நித்திய ஜீவன் வரை நிலைத்திருக்கும் உணவுக்காகவே பாடுபடுங்கள். என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் உணவைப் பற்றி கவலைப்படாதீர்கள். நாம் கவலைப்படுவதால் நம்முடைய சரீரத்தில் வியாதிகள் பெருகுகிறது. வியாதி மரணத்தைப் பிறப்பிக்கிறது. **“மாம்ச தேகமுள்ள யாவுக்கும் ஆகாரங் கொடுக்கிறவரைத் துதியுங்கள்”** (சங்கீதம் 136:25). **“அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார்”** (சங்கீதம் 147:9), ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? (மத்தேயு 6:26) போன்ற வசனங்களின் படி காக்கைகளைக் கவனியுங்கள்: அவை விதைக்கவோ அறுவடை செய்வதோ இல்லை, அவைகளுக்குக் களஞ்சியம் இல்லை; தினந்தோறும் கடவுள் அவைகளுக்கு உணவளிக்கிறார். கடவுள் தான் படைத்த எல்லா ஜீவராசிகளுக்கும் ஆகாரம் கொடுக்க வல்லவராயிருக்கும் போது இவைகளைவிட விசேஷித்தவர்களாகிய நம்மை மறப்பாரோ? நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் தேவனை நாம் பிடித்துக்கொள்ளும் போது உணவுக்காக கவலைப்படவேண்டிய அவசியமில்லை.

### 2. நமது சரீரம், உடையைப்பார்க்கிலும் மேலானது (மத்தேயு 6:25).

என்னத்தை உடுப்போம் என்று நமது உடையைப் பற்றி கவலைப்படாமல், நமது சரீரத்தைக் குறித்து சிந்திக்கவேண்டும். உடையை விட உடல் மேலானது. பறவைகளையும், பூக்களையும் விட நாம் எவ்வளவு விசேஷித்தவர்கள். **“உடைக்காகவும்**

**நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை”** (மத்தேயு 6:28) என்ற வசனத்தின் படி காட்டுப் புஷ்பங்களை உடுத்துவிக்கிற தேவன் நம்மை மறப்பாரோ! “கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? (மத்தேயு 6:27). “**அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?** (மத்தேயு 6:30). காட்டுபூக்களைக் குறித்து சொல்லும்போது சாலொமோன் முதலாய் இப்படி உடுத்ததில்லை என்று வேதம் சொல்லுகிறது. நாம் உலக பிரகாரமான உடையைத் தேடி நாடாமல் தேவனைச் சார்ந்திருக்கும் போது இவைகளெல்லாம் நமக்கு கூட கொடுக்கப்படும்.

### 3. வீடு, நிலம் (சொத்துக்கள்) இவைகளை விட நாம் (மனிதன்) முக்கியம்.

**பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்** (மத்தேயு 6:19-21) என்று வேதம் சொல்லுகிறது. நாம் உலகப் பிரகாரமான வீடு, நிலம் போன்ற சொத்துக்களைச் சேர்ப்பதைப் பார்க்கிலும், பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டும். பரலோகத்தில் பொக்கிஷங்களை எப்படி சேர்த்து வைப்பது? ஏழை எளியவர்களுக்கும், திக்கற்றவர்களுக்கும் உதவும்போது, ஆண்டவருடைய பொக்கிஷசாலையாகிய பரலோகத்தில் நாம் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறோம்.

வேத அறிஞர்கள் கவலையைக் குறித்து சொல்லும் கருத்தென்னவெனில், கவலை என்பது ஒருவகையான வியாதி என்றும், அது நம்முடைய விசுவாசத்தை அழிக்கிறது அல்லது கொள்ளையிடுகிறது என்றும் இது கடவுள் விரும்பாத, அவருக்கு விரோதமான குற்றம் என்றும் கூறுகின்றனர். இயேசு கிறிஸ்து கவலைப்படுபவர்களை அஞ்ஞானி என்று கூறுகிறார். “**நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்**” (பிலிப்பியர் 4: 6).

ஜார்ஜ் முல்லர் அவர்கள், இங்கிலாந்தில் சுமார் 68 வருடம் அனாதைகள், ஏழைகள், விதவைகள் மத்தியில் அதிகமாக ஊழியம் செய்தார். 10,000க்கும் அதிகமான அனாதை குழந்தைகளுக்கு ஆதரவளித்தார். 120 பள்ளிகளை ஆரம்பித்து இலட்சக்கணக்கான ஏழைப்பிள்ளைகளுக்கு கல்வியறிவு அளித்தார். ஒவ்வொரு நாளும் அவரது செலவுக்கு பெருந்தொகை தேவைப்பட்டது. ஆனால் அவர் யாரிடமும் சென்று கையேந்தவில்லை. ஒரு நாளின் பெரும் பகுதியான நேரத்தை அவர் ஜெபத்திலேயே செலவிடுகிறவராய் இருந்தார். எனவே அவருடைய எல்லா தேவைகளையும் அந்தந்த வேளையில் தேவன் சந்தித்தார். தன்னுடைய எல்லாத்தேவைகளிலும் கடவுளை மாத்திரமே சார்ந்திருந்ததால், ஆசிரமத்தில் உள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் அன்றன்று தேவையான எல்லாவற்றையும் தேவன் அவருக்கு கொடுத்தார்.

அன்பான தம்பி, தங்கச்சி! ஜார்ஜ் முல்லர் நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கிறார் அல்லவா. நாமும் ஆண்டவரைத் தேடும் போது நமக்கும் அவர் எல்லாவற்றையும் கொடுக்க வல்லவராயிருக்கிறார். இயேசு கிறிஸ்து தன்னை பின்பற்றியவர்களுக்கு, வரப்போகும் பிரச்சினைகளை குறித்து அளவுக்கு அதிகமாகக் கவலைப்பட தேவையில்லை என்று கூறுகிறார். நாளைக்காக இன்றே கவலைப்படுவதற்குப் பதிலாக, இன்றைய நாளை நல்ல விதமாக முடிப்பதற்கு முயற்சி செய்வோமே!



**“நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்”**
**-மத்தேயு 6:34.**

# மறுமலர்ச்சிப் பணியில் மண்ணின் மைந்தர்கள்

# ஜான் பால்மர்



Rev.T Y P Asir

"பெத்தலையில் பிறந்தவரை" "போற்றித் துதி மனமே" "ஓசன்னா பாடுவோம் இயேசுவின் தாசரே" போன்ற பாடல்களை அறிந்திராத கிறிஸ்தவர்கள் இல்லை என்று சொல்லலாம். இந்தப் பாடல்களை இயற்றியவர், கன்னியாகுமரி மாவட்ட, கீர்த்தனைக் கவிஞர்களுள் முதன்மையானவரான ஜான் பால்மர். இவர் பிறந்த மயிலாடியில் தென் திருவிதாங்கூரின் முதல் சீர்திருத்த ஆலயம் 1809-ம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த சபை குமரி மாவட்டம் மற்றும் தென் கேரள திருச்சபைகளுக்கு தாய் சபையாக விளங்குகிறது. ஜான் பால்மரின் தந்தையார் ஞானபிரகாசம், தென் திருவிதாங்கூரின் முதல் கிறிஸ்தவரான மகாராஜன் வேதமாணிக்கம் தேசிகரின் நெருங்கிய உறவினர். இவருடைய அழைப்பின் பெயரிலேயே தரங்கம்பாடியிலிருந்த ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த மிஷனெரி அருட்திரு. ரிங்கல் தௌபே மயிலாடிக்கு வந்து ஊழியம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வேதமாணிக்கம் தேசிகரின் மரபில் வந்த பலரும் மிக உயர்வான நிலையை அடைந்ததுடன், ஊழியத்தையும், கிறிஸ்துவின் இலக்கியப் பணியையும் செய்துள்ளனர். இவர் கிறிஸ்தவ சமுதாயத்தைத் தழுவியதால் அவரை வெறுத்த ஞானபிரகாசம் ஆத்திரமடைந்து, அவருக்கு 8 நாட்களுக்குள் நல்லதொரு பாடம் கற்பிப்பதாகக் கூறினார். தனது சாபம் அவரை நெருங்காததால் ஆத்திரமடைந்த ஞானப்பிரகாசம், 30 நாட்களுக்குள் வேதமாணிக்கம் இந்த உலகில் இருக்க மாட்டார் என்று சாபமிட்டார். இந்த சாபம் அவரை ஒன்றும் செய்யவில்லை. வேதமாணிக்கம் தேசிகரின் முன்னிலைமையைப் பார்க்கிலும், பின்னிலைமை சிறப்பாகவே அமைந்தது. எனவே தம் தோல்வியை ஞானப்பிரகாசம் ஒப்புக்கொண்டார். மகாராஜன் வேதமாணிக்கம் தேசிகரின் தெய்வமே உண்மையான தெய்வம் என்பதை உணர்ந்து, இயேசு கிறிஸ்துவை தன் சொந்த மீட்பராக ஏற்றுக் கொண்டார். ஞானபிரகாசத்திற்கு பால்மர் எனவும், அவரது மகனுக்கு ஜான் பால்மர் எனவும் அருட்திரு. ரிங்கல் தௌபே-யால் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது.

பால்மர் தமிழ் இலக்கியத்தில் தேர்ச்சி பெற தமிழ் பண்டிதர் திருவொம்பல தின்னமுத்தம் பிள்ளையிடம் ஆரம்பக் கல்வியையும், தொடர்ந்து நாகர்கோவிலிலுள்ள இறையியல் பள்ளியில் திருமறைக் கல்வியும் பயின்றார். அங்கு தமிழ், ஆங்கிலம், மலையாளம், வடமொழி மற்றும் கிரேக்க மொழி ஆகிய பாடங்களும் அவருக்கு கற்றுக் கொடுக்கப்பட்டன. ஜான்பால்மர் இறையியலில் அதிக நாட்டம் கொண்டு விளங்கியதால் அவர் தந்தை உயர் கல்விக்காக சென்னைக்கும், பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள வேதசாஸ்திரி கல்லூரிக்கும் அனுப்பி வைத்தார். உயர்கல்வியை முடித்து மயிலாடிக்கு திரும்பிய ஜான்பால்மரை மிஷனெரி அருட்திரு. மால்தமேக் தமக்கு எழுத்தாளராக நியமித்தார். ஜான்பால்மர் 1830-ம் ஆண்டு ஜூலை 5-ம் நாள் பேரின்பம் அம்மாளை வாழ்க்கைத் துணைவியாக்கினார். இத்தம்பதிக்கு 2 ஆண் பிள்ளைகள் பிறந்தனர். நாகர்கோவிலில் மிஷனெரியாக பணி செய்து வந்த அருட்திரு. மால்டிக்கு ஊழியத்தில் துணை செய்யும் பொருட்டு அருட்திரு. ஆடிஸ் அனுப்பப்பட்டபோது அவருக்கு தமிழ் கற்றுக் கொடுக்கும் பணியில் இவர் அமர்த்தப்பட்டார். பின்னர் அருட்திரு. ஆடிஸ் அவர்களுடன் கோயம்புத்தூர் பகுதியில் ஓராண்டு நற்செய்தி ஊழியத்தைச் செய்து பின் குடும்பத்துடன் நாகர்கோவிலுக்குத் திரும்பினார். 1845-ம் ஆண்டு செப்டம்பர் 21-ம் நாள் லண்டன் மிஷன் சங்கத்தின் 50-வது ஆண்டு விழா மயிலாடியில் நடைபெற்றது. அந்த சிறப்புத் திருநாளில் இவர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஊழியம் செய்வதற்காக 'கெம்பீர சத்தம்' என்னும் ஒரு குழுவை அமைத்தார். அந்த குழுவில் ஜான் பால்மர் உறுப்பினராயிருந்தார். அந்த குழுவின் முயற்சியினால் நாகர்கோவிலிலுள்ள சேகரத்தின் வடப்பக்கத்திலுள்ள புலிக்குடி, காட்டுப்புதூர், ஞாலம், அரசன்குவி, தாழக்குடி என்னும் கிராமங்களில் சபைகள் நிறுவப்பட்டன. ஜான்பால்மர் கவி பாடுவதுடன், புதிய சபைகளையும் நிறுவி ஊழியம் செய்து வந்தார்.

19-ம் நூற்றாண்டில் இந்தியா முழுவதிலும், குறிப்பாக தென்திருவிதாங்கூர் பகுதியில் ஜாதி கொடுமைத் தலைவிரித்தாடியது. இதன் காரணமாக மறுக்கப்பட்ட மக்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர். உயர் ஜாதிக்காரர்கள் என்று தங்களில் கூறிக் கொண்டிருந்தவர்கள், ஏழை மக்கள் கிறிஸ்தவ மதத்தில் சேருவதை பேரிழப்பாக கருதினார்கள். இச்சூழ்நிலையில் நற்செய்தியைச் சொல்ல ஜான்பால்மர் சென்றார். கீர்த்தனைகளை இயற்றுவதிலும், ராகங்களைக் கற்றுக் கொள்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்ட ஜான் பால்மர் பக்தி பரவசமூட்டும் பாடல்களால் இறைவனை மகிமைப்படுத்தி வந்தார். வைதீக இந்து குடும்பத்தில் பிறந்த ஜான் பால்மரைக் கீர்த்தனைக் கவிஞராக மாற்றியது மயிலாடி மண். எளிய, இனிய கிறிஸ்தவ கீர்த்தனைகளை எழுதிக் கொண்டும், கர்த்தரின் புகழ் பாடிக்கொண்டுமிருந்த கவிஞர் 1883ம் ஆண்டு ஏப்ரல் 2-ம் நாள் தன் ஓட்டத்தை ஓடி முடித்தார்.

**அன்பான வாலிபனே ! கர்த்தர் உங்களுக்கு தந்துள்ள தாலந்துகளை, அவருடைய பணிக்காகப் பயன்படுத்த முன் வருவாயா?**

# அடிமைத்தனங்கள்

ஐயோ! இத செய்யக்கூடாதுன்னு நினைச்சேன், செஞ்சிட்டேனே. இதைப் பார்க்க கூடாதுன்னு வச்சிருந்தேன், பார்த்துட்டேனே. இப்படி பேசக்கூடாது, இங்க போகக்கூடாதுன்னு உறுதியாயிருந்தேனே, பண்ணிட்டேனேன்னு கவலைப்படுகிறீர்களா? கவலையை விடுங்க, கீழே கொடுக்கப்பட்டுள்ள Tips கண்டிப்பா உங்களுக்கு Help பண்ணும்.

1. "குறிப்பிட்ட அடிமைத்தனத்திலிருந்து வெளிவர வேண்டும்" என்பது உங்கள் Goal ஆக மாற வேண்டும். எப்படி நாம் Maths-ல் Centum வாங்க வேண்டுமென்றால் தினமும் Sums workout பண்ணுவது போல தினமும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.
2. காலை மற்றும் உங்கள் இரவு ஜெபங்களில் அந்த அடிமைத்தனத்திலிருந்து வெளிவர மன்றாட வேண்டும். "தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைந்து கிடக்கும் பிழைகளிலிருந்து என்னைச் சுத்திகரியும். துணிகரமான பாவங்களுக்கும் உமது அடியேனை விலக்கிக்காரும்; அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்" (சங்கீதம் 19:12, 13).
3. சில பேய்கள் (பழக்கங்கள்), உபவாசத்தாலும், ஜெபத்தாலும் தான் விலகியோடும். அதனால் உன்னால் முடிந்தவரை வாரத்தில் ஏதேனும் ஒரு மாலை நேரத்தில் உபவாசம் செய்து ஜெபி.
4. நீ படிக்கும் Table-ல், உன் வீட்டு Hall-ல் அல்லது பீரோவில் நீ எதிலிருந்து விடப்பட வேண்டுமோ, அதை வசனமாகவோ அல்லது உனக்கு தோணும் வடிவில் பேப்பரில் எழுதி அதை ஞாபகமாக ஒட்டிக் வைத்துக்கொள். "அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது" (உபாகமம் 6:8).
5. நீ Mobile use பண்ணினால், அதில் Reminder set பண்ணி அல்லது Alarm set செய்து காலையும், மாலையும் ஏதேனும் ஒரு குறிப்பு வார்த்தையால் (Eg - "Caution") எழுதி உன்னையே ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.
6. ஆவிக்குரிய உன் தாய் தகப்பனிடம், Sunday Class அக்கா, அண்ணா என்று நீ நன்றாக பேசுபவர்களிடம், அவர்களின் அனுபவங்கள் மற்றும் அறிவுரைகளைக் கேட்கலாம்.
7. நீ மொபைலில் அதிக நேரம் செலவிடுகிறதாய்த் தோன்றினால், படுக்கும் போது Mobile-லை Hall-ல் வைத்துவிடலாம் அல்லது அம்மாவிடம் கொடுத்துவிட்டு தூங்கலாம். காலையில் எழுந்தவுடன் Phone பார்ப்பதையும் இதன் மூலம் தவிர்க்கலாம்.
8. கடைசியாக, பைபிள் படிப்பதும், ஜெபம் பண்ணுவதும் உன் வாழ்வின் இரு கண்களாக இருக்க வேண்டும். தேவ வார்த்தைகளை தியானித்து, நாள் முழுவதும் அதையே நினைத்துக்கொண்டிரு.

சரி, அக்கா இவ்வளவு முக்கியமா இதையெல்லாம் செய்யணுமா? அப்படின்னு கேட்டீங்கன்னா, கண்டிப்பா இது முக்கியம் தான். இல்லையென்றால் Gamer, Foodie, Fitness Freak, Pop Culture, Beauty என்று உலகத்தோடு நீயும் வேரூன்றிவிடுவாய். இப்படியெல்லாம் முயற்சி செய்து, இவ்வயதில் உன் சுபாவ எண்ணங்களையும், பாவங்களையும் விட்டு வெளி வந்தால் தான், பின்னர் முதிர் வயதிலும் அதை விடாதிருப்போம். ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையுமா? இந்த வருஷத்தின் கடைசி மாதத்தில் விட வேண்டியவைகளையெல்லாம் விட்டுவிடவும், இயேசு கிறிஸ்து உங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இரட்சகராய் பிறக்கவும் வேண்டும் என்று ஜெபிக்கிறேன்.

**அன்பு தம்பி தங்கை, அனைவருக்கும் என்னுடைய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு (2025) நல்வாழ்த்துக்கள்!**

Mrs.Jeba Tyson



## கடைசி யுக்தி:
# கிறிஸ்துவைப் பற்றிக்கொள்

Mr. Jerome

4th WEEK MESSAGE

நாம் இந்த ஆண்டின் கடைசி மாதத்திற்குள் வந்திருக்கிறோம். நாம் கடந்து வந்த 11 மாதங்களையும் சற்று Rewind செய்து பார்ப்போமானால், நம் வாழ்வு அறிவிக்கப்படாத போர் தான். அன்பு, மகிழ்ச்சி, இனிய உரையாடல்கள், புதிய இடங்களுக்கு பயணம், விருதுகள் என மனதை குளிர்விக்கும் தருணங்கள் ஒருபுறம் இருந்தாலும், சோர்வு, நோய், பிரிவு, துக்கம், பகை, பயம் என மறுபுறம் நம்மை கலங்கடிக்கும் தருணங்கள் நிறைந்தது தான் நாம் கடந்து வந்த, கடக்கவிருக்கும் பாதை.

மருத்துவம், பொறியியல், கலை, கல்வி, போக்குவரத்து, பொருளாதாரம் என அனைத்து துறைகளிலும் Artificial Intelligence-யின் அசூர வளர்ச்சி நம்மை சிலிர்க்க வைக்கிறது. AI-யின் தாக்கம் மனிதனுக்குள் மிக அதிகமாகவே இருக்கிறது. Machine-க்கு சிந்திக்கும் ஆற்றலைக் கொடுக்க உழைத்துக் கொண்டிருக்கிறான் மனிதன். இதன் விளைவு தன்னுடைய இயல்புகளான அன்பு, பரிவு, சகிப்பு, இரக்கம் என்பவைகள் மிகவும் குறைந்துப் போயிற்று. இப்படி நம்முடைய தன்மைகளை இழப்பதின் விளைவு, நீர்மேல் விழும் குமிழியின் அதிர்வு போல் குடும்பம், வீடு, சமுதாயம், ஊர், நாடு என்று எல்லையற்ற தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டே செல்கிறது.

எல்லாவற்றிற்கும் முடிவு உண்டு, எல்லாம் முடிவுக்கு வந்தாக வேண்டும் இது கடவுள் ஏற்படுத்திய நியமம். இது வேதாகமத்தை வாசிக்கும் நமக்கு மட்டும் தெரிந்திருக்கும் செய்தி என நினைக்கிறோம். உண்மையில் எல்லா மனிதர்களுக்கும் இது தெரியும். அவர்கள் எழுதி வைத்திருக்கும் இதிகாசங்களின் இறுதி அத்தியாயம், இந்த உலகத்தின் முடிவுதான். உண்மைக்கும், பொய்க்கும் இருக்கும் Margin of Error மிகவும் குறைவு. உலகத்தின் முடிவு என்பது கடவுள் படைத்த முழு மனுக்குலத்தின் நியாய விசாரிப்பு நாள். அன்று யார் நியாயாதிபதியாக அரியணையில் அமரப் போகிறார் என்பது தான் உலகிற்கும், நமக்கும் உள்ள சிக்கல்.

இன்னொருபுறம் பரம் பொருளை அறிந்தும், தன்னுடைய அறிவியல் கோட்பாடுகளுக்குள் அவரைக் கொண்டு வந்து விட வேண்டும் என நினைப்பவர்கள் உலகத்தின் முடிவுக்கு வைக்கும் பெயர் மூன்றாம் உலக யுத்தம். இந்த பதம் அரசியல் பொருளாதாரம், அறிவியல் ரீதியான சரியான வார்த்தை தான்.

Cassius Clay இவரை உங்களுக்கு தெரியுமா? Clay ஒரு பிரபலமான குத்துச்சண்டை வீரர். நினைவுக்கு வரவில்லையா? அவர்தான் Mohammed Ali. இந்த நூற்றாண்டின் தலைசிறந்த குத்துச்சண்டை வீரர். நிறவெறியின் ஆதிக்கத்தை எதிர்த்து தன்னுடைய பிறப்பு பெயரை மாற்றிக்கொண்டார். இப்படி Cassius Clay முதல் Mike Tyson வரை எல்லோரும் வெவ்வேறு காரணங்களுக்காக தங்கள் பெயரையும், மத நம்பிக்கையையும் மாற்றிக் கொள்கிறார்கள். இவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமை என்னவெனில், இவர்களெல்லாம் ஒரே குறிப்பிட்ட மதத்திற்கு மாறிக் கொள்கிறார்கள்.

சமீபத்தில் ஒரு பிரபலமான YouTuber இணையதளத்தில் மூன்றாம் உலக யுத்தம் வரும்போது, நான் Cassius Clay ஏற்றுக்கொண்ட அதே மதத்துக்கு மாறிவிடுவேன் என்று பதிவு செய்திருக்கிறார். அவர் முன்வைக்கும் விவாதங்கள் கிறிஸ்தவ இளைஞர்கள் நிதானிக்க வேண்டியவை. அந்த YouTuber-ன் வாதங்களைப் பார்ப்போம்.

1800-ன் தொடக்கத்திலிருந்து 1912 வரை ஆங்கிலேயர்கள் ஆப்கானிஸ்தானை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்து தோற்றுப்போனார்கள். இவர்களைத் தொடர்ந்து அமெரிக்கர்கள், கடைசியாக ரஷியர்கள் என உலகத்தை ஆட்டிப்படைக்கும் பெரும் சக்திகள் எல்லாம் மண்ணைக் கவ்வியது. அதனால் மூன்றாவதாக ஒரு பெரிய யுத்தம் வருமாயின், அந்த குறிப்பிட்ட மதத்தினரை யாராலும் வெல்ல முடியாது என்பதுதான் அந்த வாதங்களின் சாராம்சம்.

கவனியுங்கள், முதலாவது கர்த்தராகிய இயேசுவை கிறிஸ்து என்று அறிந்தவன், அறியாதவன் என்ற வித்தியாசமே இல்லை. எல்லோருக்கும் தெரிந்த அந்த உண்மை மூன்றாம் உலக யுத்தம் என்னும் உலகின் நியாய விசாரிப்பு நாள்.

நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பூமி சுழன்று கொண்டு, நம்மைக் கொண்டு செல்லும் இறுதி புள்ளி இதுதான். இரண்டாவதாக இப்படி உலகத்தின் அழிவிலிருந்து தன்னைத் தப்பித்துக்கொள்ள Technology, பணம், அறிவியல் என எந்த மனித முயற்சிகளையும் நம்பவில்லை. மனிதனால் முழுவதும் விளங்கிக் கொள்ள முடியாத ஒரு பிரம்மாண்ட ஆற்றலைத் தான் மனிதன் தேடுகிறான். ஆக முழு மனுக்குலத்திற்கும் தெளிவாய் உணர்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் செய்தி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நியாய விசாரிப்பு நாள்.

வெளிப்படுத்தின விசேஷம் இந்த உலகின் இறுதி நாட்களில் நடக்கவிருக்கும் சம்பவங்களை மிக உறுதியாக நம் கண்முன் காட்டும் புத்தகம். வெளி. 16ம் அத்தியாயம் அர்மகெதோன் யுத்தத்தை குறிப்பிட்டு காட்டுவது, இந்த உலகம் சந்திக்க தயாராகிக் கொண்டிருக்கும் மூன்றாவது உலக யுத்தம். இந்த யுத்தம் கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையே நடக்கவிருக்கிறது. அர்மகெதோன் என்னும் சொல் முழு வேதாகமத்தில் ஒரே ஒருமுறை மட்டும் தான் வருகிறது. படைப்புகள் ஒன்றோடு ஒன்று போரிடுவது என்பது இயல்பு. ஆனால் படைப்புகளின் மகுடமான மனிதன் தன்னை படைத்தவரை எதிர்த்துப் போர் புரிவது என்பது நடைமுறையில் சாத்தியமற்றது. இருப்பினும், இந்த யுத்தம் நம் கண்களுக்கு புலப்படாமல் நடந்து கொண்டிருக்கிறது. உதாரணமாக மனிதர்கள் ஒன்று கூடி பாபேல் கோபுரத்தை கட்ட தீர்மானிக்கிறார்கள். அவர்கள் செய்ய நினைத்ததை படைத்தவர் சுக்குநூறாக்கி போட்டார். மனிதனின் அனைத்து மனக்கணக்குகளையும், பொய்க்கணக்காக்குவது தான் கர்த்தரின் பண்பு.

சரி அர்மகெதோன் போருக்கு வருவோம். நமக்கு புரிய வேண்டிய முதல் காரியம் என்னவெனில், இந்த போர் நம்முடையதல்ல. இன்னும் துல்லியமாக சொல்லப்போனால் கர்த்தராகிய இயேசுவை தன்னுடைய மணவாளனாக (Adonai) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் அர்மகெதோன் போரைப் பார்க்கமாட்டார்கள்.

இரண்டு பேர் படுத்து தூங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்களில் ஒருவன் எடுத்துக் கொள்ளப்படுவான், மற்றொருவன் பூமியிலிருப்பான். இதை எப்படி புரிந்துக் கொள்வது, வாசியுங்கள் மத்தேயு 25:1-13. திருமணத்திற்காக தயாராகி மணவாளனுக்காக காத்துக் கொண்டிருந்த 10 இளம் கன்னி பெண்களை பற்றி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுத்தின உருவகம். இது அவருடைய இரகசிய வருகையின் முன் அறிவிப்பாக அமைகிறது. கர்த்தரின் ஒரே மகனான இயேசு கிறிஸ்துவின் சிலுவை தியாகம், இரட்சிப்புக்கு தூரமாக இருந்த நம்மை, அவருடைய நேச மனைவியாக ஏற்படுத்தியிருக்கிறது. அவருடைய தூய்மையான இரத்தத்தினால் நம்மை அவருக்கு சொந்தமானவர்களாக சம்பாதித்துக் கொண்டார். இப்படி அவருக்கு மணப்பெண்ணாய் நிச்சயிக்கப்பட்டிருக்கும் நமக்குள் ஆண், பெண் என்ற வேறுபாடுகளே இல்லை. நம் இரட்சிப்பின் அவசியம், நம்முடைய மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவுடன் நித்திய காலமாக வாழ்வதற்காகவே. இப்படி அவருடனான வாழ்வு இந்த உலக ஓட்டத்திற்கு பின்பு அமையும், இல்லையேல் கர்த்தருடைய நாள் சீக்கிரமாக வருமாயின் சந்திப்பின் நாளில் அவரோடு இணைவோம்.

அப்படியானால் அர்மகெதோன் போர் யாருக்கிடையிலானது? அசதியாக இருந்தவர்கள், இரட்சிப்பை உதாசீனம் பண்ணியவர்கள், கர்த்தராகிய இயேசுவை கிறிஸ்து என ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்று இந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இவர்கள் கைவிடப்பட்டவர்களாக பூமியிலிருந்து மனித ஆற்றலையும், பெலத்தையும் கொண்டு ஆளப்படுபவர்கள். தாவீதின் சங்கீதம் 2-ம் அத்தியாயம் இவைகளைப் பற்றி நமக்கு விவரிக்கிறது. Mike Tyson ஆனாலும் சரி, இந்த உலகின் வேறெந்த அதிபதியானாலும் சரி, தப்பிக் கொள்வதற்கு ஒரே வழி தான் இருக்கிறது. அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசமே. இது உலகத்திலுள்ள எந்த மனிதனையும் விடுதலையாக்கும்.

**எனது அன்பு தம்பி, தங்கையே நீங்கள் எந்த கூட்டத்தில் இருக்கப் போகிறீர்கள்? கிறிஸ்துவைப் பற்றும் வாழ்வு, அறிவிக்கப்படாத போர். அதனால் தான் இதை குறுகிய வாசல் என்று வேத புத்தகம் குறிப்பிடுகிறது. உலகத்தில் உங்களுக்கு பாடுகளும் உபத்திரவங்களும் உண்டு என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். ஆகிலும் நம்முடைய காத்திருப்பு மரணத்தை வெற்றிச்சிறந்த மணவாளனாம் இயேசு கிறிஸ்துவுடன் நித்திய காலமாக வாழ்வதற்காகவே. இந்த காத்திருப்பு நிச்சயம் நிறைவடையும். அன்று நம்முடைய நேசர் நமக்கு கட்டியிருக்கும் வீட்டில் அவரோடு என்றென்றும் வாழ்ந்திருப்போம். (மத்தேயு 25, சங்கீதம் 2, வெளி. 16, ஆதியாகமம் 6, 7).**

**இந்த யுத்தத்தில் நாம் மேற் சொன்ன யுக்தியை பயன்படுத்தினால், Gallery-யில் உட்கார்ந்து கண்டுக் களிக்கலாம். யுக்தியை பயன்படுத்தத் தவறினால் யுத்த போர்களத்தில் நேரடியாகவோ அல்லது அதன் பாதிப்புகளிலோ நிற்க வேண்டியதாயிருக்கும்.**

# கிறிஸ்துமஸ் பயணம்
## (Journey of Christmas)

Rev. Daniel Gnanaprakasam

"அந்நாட்களில் மரியாள் எழுந்து, மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள்" (லூக்கா 1:39, 40).

நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் அநேகப் பயணங்களை மேற்கொள்கிறோம். அப்பயணங்களின் முடிவுகளே அனுபவங்களாகின்றன.

* சிகரங்களில் உற்பத்தியாகும் நீரானது கடலைச் சந்திக்கின்றன.
* ஆழ்கடலில் எழும் அலைகள் கரையைச் சந்திக்கின்றன.
* மேகங்களில் உண்டாகும் மழை நீர் நிலத்தைச் சந்திக்கின்றன.

இப்படியான பல சந்திப்புகள் அர்த்தமுள்ள புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறது.

கலிலேயா பிராந்தியத்திலுள்ள நாசரேத்தில் வாழ்ந்து கொண்டிருந்த கன்னி மரியாளின் பயணம் சுமார் 70 மைல் தூரம். தென்திசையில் உள்ள யூதேயாவின் "என்கரீம்" என்ற பகுதியில் வாழ்ந்த வயது சென்ற எலிசபெத்தை சந்தித்த அனுபவம்.

* இது பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இடையேயுள்ள வெற்று காகிதத்தாளின் 400 ஆண்டுகால அமைதியை உடைத்த பயணம்.
* இது பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாண மாதிரியான எலிசபெத்திற்கும், புதிய ஏற்பாட்டின் கிருபையின் பிரமாணமான மரியாளுக்குமிடையே உள்ள சந்திப்பு. தேவதூதனால் வாழ்த்து பெற்ற மரியாள், எலிசபெத்தை வாழ்த்திய போது வயிற்றிலுள்ள பிள்ளை மத்தாப்பாய் பூரித்தது (லூக்கா 1:41).

**I. மரியாளின் பயணம் – அடைக்கலம் தேடிச்சென்றது:**
கன்னிப்பெண் கர்ப்பவதியானாள் என்று கண்டுபிடிக்கப்படும்போது கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் (உபாகமம் 17:5). தேவ தூதன் கொடுத்த வார்த்தையை விசுவாசத்தின் உறுதிமொழியாய் பெற்றுக் கொண்ட மரியாள், தன்னை ஆண்டவருக்கு ஒப்புவித்துச் சென்றாள். மீட்பின் பேழையான கிறிஸ்துவைச் சுமந்து சென்ற ஒரு பயணம்.

**II. மரியாளின் பயணம் – ஆவலை வெளிப்படுத்தியது:**
வயது முதிர்ந்த தன் இனத்தாள் எலிசபெத் கர்ப்பவதியானாள் என்ற செய்தியைத் தேவதூதன் மூலம் அறிந்து, மலை நாட்டிற்குப் பயணப்பட்டு ஓடச் செய்தது. அது கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ண வந்த எலியாவின் ஆவியும், பலமும் உடைய யோவான்ஸ்நானகனைப் பற்றியது (லூக்கா 1:17).

**III. மரியாளின் பயணம் – அடையாளத்தை உறுதிப்படுத்தியது:**
பரிசுத்த ஆவியினால் கர்ப்பந்தரித்த மரியாளை, எலிசபெத்தும் "ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று வாழ்த்தி, உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது" என்ற தேவதூதனின் வாழ்த்துக்களை உறுதிப்படுத்தியது. மேசியாவின் அடையாளத்தை "என் ஆண்டவரின் தாய்" என்ற வார்த்தை உறுதிப்படுத்தியது.

**இந்நாட்களில் நாம் கொண்டிருக்கும் கிறிஸ்துமஸ் பயணத்திலே தம்முடைய கிருபையினால் நம்மைச் சந்தித்த ஆண்டவரைத் தண்டனைக்கு தப்புவிக்கும் அடைக்கலமாக கொண்டிருக்கிறோமா! நம்முடைய இரட்சிப்பைக் குறித்த ஆவலைக் கொண்டிருக்கிறோமா! நமக்குள் இந்த இயேசு பிறந்திருக்கிறார் என்று அடையாளப்படுத்துகிறோமா! இதை சிந்தித்து கிறிஸ்துமஸ் பயணத்தை தொடர்வோமாக.**



# மைக் டைசன்

## ஜொலிக்கத் தவறிய நட்சத்திரங்கள் -6

1985 முதல் 2005 வரை... 20 ஆண்டுகள் குத்துச்சண்டை உலகில் மறக்கயியலா நபராக வலம் வந்தவர்தான் மைக்கேல் ஜெரார்டு டைசன். 58 போட்டிகள், 50 வெற்றிகள், அதில் 44 நாக் அவுட் வெற்றிகள், 20ம் வயதிலேயே உலகின் Heavy Weight Champion பட்டத்தை வென்று ஒட்டு மொத்த குத்துச்சண்டை உலகையும் பிரமிப்பில் ஆழ்த்தியவர்.

மிகவும் இளம் வயதிலே உலகின் குத்துச்சண்டை ஜாம்பவான்களை வென்ற டைசனின் துவக்கம் என்னமோ போராட்டமாகவே இருந்தது. புத்தி சொல்ல ஆளில்லை... கேட்கிறதற்கும் புத்தியில்லை என்பது தான் டைசனின் வாழ்க்கை. முறைக்கேடான அம்மாவின் வாழ்வு, அப்பா என அழைக்கயியலா குடும்ப உறவின் சிதைவு, வறுமை, பொருளாதார சுமைகள் இவையனைத்தும் நியூயார்க் புரூக்ளின் தெருக்களில் ஓடும் ஒரு காட்டுக் குழந்தையாகவே அவரை மாற்றியிருந்தது. அவரிடம் பேசவோ, அவருடைய செயல்களில் பெருமைப்படவோ வழியற்றிருந்த டைசன் தன் 13ம் வயதை அடைவதற்குள் 38 முறை சிறுவர் சீர்திருத்தப் பள்ளி சிறைக்குச் சென்று வரும் வாடிக்கையாளரானார்.

இக்கால கட்டங்களில் ஒரு முறை சீர்திருத்த சிறையைப் பார்வையிட வந்த புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் முகமது அலியின் வருகையும், அவரின் சாதனையையும் கேள்விப்பட்ட மைக் டைசன் இந்த வீரனைப் போல மாற வேண்டும் என ஆவல் கொண்டார். ஆனால் அதைக் குறித்த ஆரம்ப அரிச்சுவடி அறியாத டைசனுக்கு பாபி ஸ்டிவார்ட் என்ற குத்துச் சண்டை வீரரின் உதவியும், அவர் அடையாளம் காட்டிய சிறந்த பயிற்சியாளரான கேஸ் டீ அமொட்டா (Cas 'D' Ameto) வின் அறிமுகம், அவரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. நல் வார்த்தைகளையும், அன்பையும், அரவணைப்பையும் அறியாத டைசனை கொஞ்சம் கொஞ்சமாக செதுக்கியது Cas 'D' Ameto வின் ஊக்க வார்த்தைகள். பயிற்சியின் பக்குவம், நீ தான் அடுத்த Heavy Weight Champion என்ற Positive வார்த்தைகள் சாதித்தே ஆக வேண்டும் என்ற வெறியை டைசனுக்கு ஊட்டியது.

1981-ம் ஆண்டு 15 வயது நிரம்பிய டைசனுக்கு வடக்கு கரோலினாவில் நடைபெற்ற ஜூனியர் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. ஜோ கோர்டெஸ் என்ற சக அமெரிக்க வீரனை முதல் சுற்றில் அதுவும் 8 வினாடிகளில் நிலைகுலைய வைத்து, நாக் அவுட் செய்து தங்கப்பதக்கம் பெற்றார். டைசனின் இந்த முதல் பிரவேசமே குத்துச்சண்டை உலகை மிரள வைத்தது. அன்று துவங்கிய பயணம் WBC (World Boxing Council) WBA (World Boxing Association) IBF (International Boxing Federation) என்று வரலாற்று சாதனை மிக்க பெல்ட்களை பெற்ற ஒரே Boxer என்ற சாதனைகளுடன் நினைக்கயியலா எல்லையின் உச்சிக்கே சென்றார். Iron Mike, Kid Dynamite என்று செல்லப் பெயருடன் அவர் ஆதரவாளர்களால் கொண்டாடப்பட்டார். இந்நிலையில் ஜப்பானிலுள்ள டோக்கியோவில் 1990-ல் நடைபெற்ற போட்டியில் எதிராளி ஜேம்ஸ் டக்ளஸ்ஸை மிக எளிதாக வெல்லலாம் எனப் பலத்த எதிர்பார்ப்புடன் களமிறங்கிய டைசன் மிக பரிதாபமான தோல்வியைச் சந்தித்தார். அதிக பணம், புகழ், போதை, குடி, பெண் சகவாசம் என அனைத்தும் டைசனை சுற்றிக்கொள்ள பயிற்சியை மறந்தார். எதிராளியை மிக எளிதாக எடைபோட்டதன் விளைவு 37 போட்டிகளில் பெற்ற தொடர் வெற்றியை இப்போட்டி நிறுத்தியது. போட்டி வளையத்திற்குள் வீழ்த்தப்பட்டதை மூர்க்கமாக வெளி வாழ்வில் வெளிப்படுத்தினார். கோபத்தின் உச்சமாக அவரின் செயல்பாடுகள் அவரைச் சிறைக்குள் தள்ளியது. ஒழுங்கற்ற அவரின் செயல்கள், கோபம் அவரது மணவாழ்வையும் பாதித்தது.


2 மனைவிகளும் அவரை விட்டு பிரிந்தனர். ஜெயிலிலிருந்து வெளிவந்து திரும்பவும் அதிக பயிற்சியுடன் வெற்றிகளைப் பெற்றாலும், 1997-ல் ஈவான்டர் ஹோலி ஃபீல்டுடன் நடந்த போட்டியில் தோல்வியுற்றவுடன், அவருடைய காதின் ஒரு பகுதியை கடித்து துப்பியதால் குத்துச்சண்டை கவுன்சிலிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். அவரது Boxing License ரத்து செய்யப்பட்டு, 3 மில்லியன் டாலர் அபராதமும் விதிக்கப்பட்டார். பின்பு மன்னிப்பு கேட்டு, மீண்டும் விளையாட அனுமதிக்கப்பட்டார்.

**பிரியமானவர்களே!**

மிகக் குறைந்த கால அளவில் செல்வத்திலும், புகழிலும் உச்சத்திற்கு சென்றவர் அதனை தன் கைகளாலேயே அழித்துப் போட்டார். சிறை, அபராதம் எனப் பல பிரச்சினைக்கு பின்பும் தன் வங்கிக் கணக்கிலிருந்த 2100 கோடியை ஊதாரித்தனமாக செலவு செய்து வீழ்ச்சியைக் கண்டார். தன் சொகுசு வாழ்க்கைக்காக 110 கார்கள், 1500 Sneaker Shoes வைத்திருந்தார். தன் 21 பெட்ரூம், 24 குளியலறைகள் கொண்ட பிரமாண்ட பங்களாவில் காவலுக்கு 2 பெங்கால் புலி, 1 வெள்ளைப் புலி, இதனை பராமரிப்பதற்கு வருடத்திற்கு 1 கோடியில் பணியாள், 4 நீச்சல் குளம், மனைவி குளிப்பதற்கு 15 கோடியில் ஓர் தங்க குளியல் தொட்டி, தனக்கு 5 கோடி மதிப்பில் வைரத்தாலான கைக்கடிகாரம் என நீளும் இந்த பட்டியலால் தன் வங்கி கணக்கிலிருந்த பணத்தை எல்லாம் இழந்து 350 கோடிக்கு கடனாளி ஆனார்.

**குத்துச்சண்டை உலகமே கொண்டாடிய டைசன் 2005-ல் ஒரு பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில்...**
**"என் வாழ்க்கை ஓர் மிகப்பெரிய Failure, வாழ்க்கை எப்படி வாழக்கூடாது என்பதற்கு நானே ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்திருக்கிறேன்" என்றார்.**

**இளைஞனே! யுவதியே!**
**ஜொலிக்கத் தவறிய நட்சத்திரமாய் வாழ்ந்த மைக் டைசன் நமக்கொரு எச்சரிப்பு...**




"நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். (2 பேதுரு 3:14)

Rev. Emmanuel RanjithSingh

# தமிழ்நாடு மண்டல வாலிபர் முகாமின் ஆசீர்வாதங்கள்



## கேரீத் நண்பர்கள் அனைவருக்கும்

## கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்